நாட்டுப்புறக் கதைப்பாடல்

குருசாமி கதை

126

பதிப்பாசிரியர்
டாக்டர். தி. நடராசன்
தமிழ்த்துறை
மதுரைப் பல்கலைக்கழகம்

O-,8,K
N76
107533

நாட்டுப்புறக் கதைப்பாடல்

ASSISTANT REGISTRAR OF BOOKS
30 SEP 1978
MADRAS 600 005
PUBLIC (I & PR) DEPARTMENT

குருசாமி கதை

பதிப்பாசிரியர்:

டாக்டர். தி. நடராசன்

தமிழ்த்துறை

மதுரைப் பல்கலைக்கழகம்

முதற்பதிப்பு 1976

O-, 8, K
N76

பதிப்புரிமை: பதிப்பாசிரியர்க்கே

விற்பனை உரிமை: சர்வோதய இலக்கியப் பண்ணை,
மேலவெளி வீதி,
மதுரை-1.

107533

விலை ரூ. 2-50

அச்சிட்டோர்

முருகன் அச்சகம்,
23, கீழ அனுமந்தராயன் கோவில்தெரு,
மதுரை-1.

நன்றியுரை.

'குருசாமி கதை' ஏட்டுச் சுவடியைக் கொடுத்தும் மேலும் அது பற்றிய விளக்கங்கள் தந்தும், ஐயங்கள் அகற்றியும் உதவிய என் தாய் மாமன் சு. பள்ளி கொண்ட பெருமாள் அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக. அடுத்து இவ்வேட்டினை படிப்பதற்கு பெரிதும் உதவியாயிருந்த மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் துணைப் பேராசிரியர் டாக்டர் ஜி. விஜய வேணுகோபால் அவர்களுக்கும், ஏட்டினை யெழுதி அச்சாக்குவதற்கு பெரிதும் ஊக்கமளித்த மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர். முத்துச் சண்முகன் அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரியதாகுக. மேலும் இவ்வேட்டினை யெழுதி படியெடுக்குங்காலும் அச்சாகுங்காலும் உதவிய என் மாணவ நண்பர்கள் அ. பிச்சை எம். ஏ., அ. மணிமாறன் எம். ஏ., இரா. செயராமன் ஆகியோருக்கும் என் நன்றிக் கடன் உரியதாகும். இறுதியாக நன்முறையில் அச்சாக்கித் தந்த முருகன் அச்சகத்தார்க்கும் நான் நன்றி பாராட்டுகின்றேன்.

இவை
டாக்டர். தி. நடராசன்

மதுரை
10—11—1976.

அணிந்துரை

டாக்டர். **முத்துச் சண்முகன்,**
தமிழ்த் துறைத் தலைவர்,
மதுரைப் பல்கலைக் கழகம்,
மதுரை-21.

மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பல பழைய ஏட்டுச் சுவடிகளைத் திரட்டி வருகின்றோம். அம்முயற்சியில் தமிழ்த் துறை ஆசிரியர்களும் ஆராய்ச்சி மாணவர்களும், முதுகலை மாணவர்களும் ஈடுபட்டு வருகிறார்கள். இதுவரை தமிழ்த் துறையில் திரட்டிப் பாதுகாக்கப்பட்டுள்ள ஏட்டுச் சுவடிகள் இருநூற்றுக்கு மேற்பட்டவைகளாகும். இவ்வேட்டுச் சுவடிகளில் பெரும்பான்மையானவை நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்; நாடகங்களும் உள்ளன. ஏட்டுச் சுவடிகளைத் திரட்டித் தந்த மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் தெய்வயானை, செயராமன், குப்புசாமி முதலியோர்.

திரட்டிய ஏட்டுச் சுவடிகளில் ஒன்றான 'குருசாமி கதை' என்ற கதைப்பாடலை எமது துறை ஆசிரியர் டாக்டர். தி. நடராசன் பெயர்த்தெழுதி அச்சுக்குக் கொண்டு வந்துள்ளார். ஏட்டிலிருந்து பெயர்த்தெழுதி அச்சுக்குக் கொண்டு வரும் பொழுது பதிப்பாசிரியரால் எவ்வித மாற்றமும் செய்யாமல் பதிப்பித்திருப்பது பதிப்பில் கையாண்டுள்ள புதுமையாகும். மாறுபாடுகள் வருகின்ற இடங்களை விளக்கி அடிக்குறிப்பில் கொடுத்திருப்பது பாராட்டத்தக்கது. இந்த ஏட்டுச் சுவடி எங்கிருந்து கிடைத்தது என்பதைச் சுவடியின் வரலாற்றில் நன்கு விளக்கியுள்ளார். நாட்டுப்புற மக்கள் தங்கள் சொத்தாகக் கருதி வருகின்ற ஏட்டுச் சுவடியினை அச்சேற்றுங்கால் எத்துணை ஆர்வமும் மகிழ்ச்சியும் கொள்கிறார்கள் என்பதனையும் சுவடியின் வரலாறு என்ற பகுதியில் விளக்கியுள்ளார்.

இந்நூலின் நூன் முகம் என்ற பகுதி நூலைப் படிப்பதற்கு முன் நூலினை எளிதில் அறிந்து கொள்ள மிகவும் துணை செய்யும்.

மதுரை
29—11—1976.

இவை
முத்துச் சண்முகன்.

சுவடியின் வரலாறு

இக்குருசாமி கதை ஏட்டுச்சுவடி குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலிலிருந்து இரண்டு கல் தொலைவில் அமைந்திருக்கக்கூடிய பட்டக சாலியன் விளை ஊரிலிருந்து கிடைக்கப் பெற்றது. பட்டக சாலியன் விளை என்று இன்று குறிப்பிடப்படுவது ஏட்டில் பட்டாலியன் விளை என்று எழுதப்பட்டுள்ளது, மேலும் இன்றும் பலர் பேச்சு வழக்கில் பட்டாலியன் விளை என்றும் கூறுவர். பதிப்பாசிரியரின் தாயார் ஊரும் இதுவே. எனவே இளமைக் காலந் தொட்டே இவ்வூரோடு எனக்கு நெருங்கியத் தொடர்பு உண்டு. இவ்வூரில் எனது தாய்மாமன் உறவினர்கள் வழிபட்டு வருகிற கோவில் ஒன்று உள்ளது. அக்கோவில் பெருமாள் சாமிக் கோவில் என்றழைக்கப்படும். இக் கோவிலில் மேலும் சில ஏட்டுச் சுவடிகள் உள்ளன, அவை பெருமாள் சாமிக்கதை, தாதரம்மன் கதை போன்றன.

பெருமாள் சாமிக் கோவிலில் ஆண்டுக்கொரு முறை சித்திரை மாதம் ஒன்றும் நாள் 'சித்திரைப் பிறப்பு' என்ற பெயரில் விழா வொன்று நடைபெறும். இவ்விழாவில் இக் கோவிலில் இசைக் கச்சேரிகள், நாடகங்கள், தர்ம உணவு போன்றன நடைபெறும். மேலும் அன்று காலை வேளையில் ஒரு சில பெரியவர்கள் இவ்வேட்டுச் சுவடியினை இசையோடு படிப்பதும் உண்டு. இல்லையேல் வில்லிசை நிகழ்ச்சி இருக்குமானால் விற்பாட்டுக் காரர்களிடம் இவ்வேட்டில் உள்ள பாடல்களை யாரேனும் ஒருவர் சொல்லிக் கொடுத்துப் பாடுவதும் உண்டு. இந்நிகழ்ச்சிகளை என் இளமைக் காலந் தொட்டே நான் கண்டும், கேட்டும் வந்துள்ளேன். இப்பொழுது தமிழ் ஆய்வுத் துறையில் ஈடுபட்டமையால் பழந் தமிழ் நூல்களைப் படிக்கின்ற போது தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அந்நூற்களை அச்சேற்றுவதற்கு எடுத்துக் கொண்ட வழி முறைகள் என் உள்ளத்தைப் பன்முறை கொள்ளை கொண்டன. ஏடுகளைத் திரட்ட அவர்பட்ட அரிய துன்பங்களும், சுவையான நிகழ்ச்சிகளும் என்னையும் கவர்ந்தன. அடுத்து நாட்டுப்பாடல் என்ற வரிசையிலே அண்மையிலே பேராசிரியர் நா. வானமாமலை அவர்களால் பல ஏட்டுச் சுவடிகள் அச்சிடப்பட்டு மதுரைப் பல்கலைக் கழக வெளியீடாக வந்துள்ளமையும் நான் கண்டேன். அவைகளில் அவர் எழுதிய குறிப்புரைகளையும் படித்தேன். குமரி மாவட்டத்திலும் பல ஏட்டுச் சுவடிகள் அச்சேறுமல் ஆங்காங்கே இருப்பனவாக நான் அறியலுற்றேன். மேலும் பெரிதும் அவைகள் நாட்டுப் பாடல்களாக இருப்பதையும் உணர்ந்தேன். அவைகளையும் அச்சுக்குக் கொண்டு வர வேண்டும் என்பது எனது நீண்ட நாள் அவா. எனவே முதன் முதலில் என் தாய் மாமன் கோவிலில் உள்ள ஏடுகளைப் பற்றி என் தாய் மாமன் திரு. பள்ளி கொண்ட பெருமாள் அவர்களிடம் சில விவரங்களைக் கேட்டேன். அவர்கள் எல்லையற்ற ஆவலுடன் கோவிலிலிருந்த ஏடுகளை என்னிடம் அளித்து எப்படியும் அச்சாக்கி விடவேண்டும்

என்ற ஊக்கமும் அளித்தார்கள். ஏட்டினைப் பார்த்து விட்டுப் படிப்பதற்குச் சிரமமாக உள்ளதே என்றேன். ஐயம் வருமிடங்களை என்னைக் கேள் என்றார்கள். பல ஐயங்களைக் கேட்டுக் கொண்டேன். எனவே அது முதல் பல ஏடுகளை நான் படிக்க முயற்சி செய்தேன். இவ்வேடு படிக்கும் முயற்சியில் எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தவர் மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் துணைப் பேராசிரியர் டாக்டர் ஜி. விஜயவேணுகோபால் அவர்கள் ஆகும். அடுத்து இவ்வாறு ஏடுகளை அச்சுக்குக் கொண்டு வர முயற்சி செய்கிறேன் என்று தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர். முத்துச் சண்முகன் அவர்களிடம் கூறிய போது அவர்களும் எல்லையற்ற ஊக்கமளித்தார்கள். இவை எல்லாவற்றின் விளைவாக முதன் முதலில் 'குருசாமி கதை' என்னும் ஏட்டுச் சுவடியைப் பெயர்த்தெழுதி அச்சுக்குக் கொண்டு வந்துள்ளேன்.

குருசாமி கதை 33 ஓலைகளில் எழுதப்பட்டுள்ளது. ஏட்டிலிருந்து பெயர்த்தெழுதும் போது எந்த விதமான மாற்றமும் பதிப்பாசிரியரால் செய்யப்படவில்லை. எவ்வாறு எழுதப்பட்டுள்ளதோ அவ்வாறே அச்சுக்கும் கொண்டு வரப் பட்டுள்ளது. ஏடுகளைப் பெயர்த்து எழுதும் போது சிலர் தாமாகச்சில திருத்தங்களைச் செய்துள்ளனர். அது முறையற்ற ஒன்று எனக் கருதி இங்கு அம் முறை பின்பற்றப்படவில்லை. ஆயின் குறிப்புரையில் தவறான வடிவங்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு உள்ளதை உள்ளபடி பதிப்பதால், ஏட்டுச் செய்தி நாட்டுப் பாடலாக உள்ளமையால்,அக்காலத்துப் பேசிய படியே பெரிதும் எழுதப்பட்டுள்ளமையால் அக்காலப் பேச்சு மொழியின் தன்மையினை உணர ஏதுவாகிறது என்பது குறிப்பிடத்தக்கதாம். மேலும் ஏடு எழுதியவர் நிறைந்த கல்வியறிவு உடையவரல்லர். எனவே பற்பல தவறுகளும் உள்ளன என்பதும் அறிந்து கொள்ள வேண்டிய செய்திகளில் ஒன்றாகும். தவறு சில காணப்படினும் எழுதி வைத்து நமக்கு விட்டுச் சென்றுள்ளனரே என்பதில் பெருமிதம் கொள்ள வேண்டிய நிலையிலுள்ளோம். அதனை விட எழுதிய ஏட்டைப் பாதுகாத்துப் பேணியுள்ளனரே என்பதில் எல்லையற்ற மகிழ்ச்சி கொள்ள வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும் என் போன்று மேலும் பலரும் இத் துறையில் ஈடுபடுவாராயின் தமிழ் மொழியில் மேலும் பல நூற்றுக்கணக்கான இலக்கியங்கள் வெளி வரும் என உறுதி கூறுகின்றேன். எனவே இம்முயற்சியில் பலரை ஈடுபட வேண்டுகின்றேன்.

என்னுடைய முதல் முயற்சியில் குறைகள் இருப்பின் அறிஞர் உலகம் பொறுத்தருள்க.

நூன் முகம்

குருசாமி கதை ஒரு நாட்டுப்புறக் கதைப் பாடலாகும். இக்கதை சிவனுரை மையமாகக் கொண்டு கவிஞனின் கற்பனையால் உருவெடுத்ததாகும். சிவன் மனிதராகத் தோன்றிப் பின்னர் அவன் செய்தருளிய செயல்களை வருணனையாக இப்பாடலில் அமைந்துள்ளன. எனவே இப் பாடல் தெய்வத்தை மையமாகக் கொண்ட நாட்டுப்புறக் கதைப்பாடல் எனலாம்.

நூற் பெயர்

தமிழகத்தின் தென்பகுதியில் வழங்கி வருகிற நாட்டுப் புறக் கதைப் பாடலே இக்குருசாமி கதை. குருசாமி கதை யென்றே முதல் ஓலையிலும் இன்றைய பேச்சு வழக்கிலும் காணப் படுகிறது. ஆனல் நூலுள், **'குருதவசி அய்யா** நீணிலத்தில் வந்த கதை கூற' என்று காணப் படுகிறது. பேச்சு வழக்கில் 'குருசாமி கதை' என்று கூறப் படுவதால் அவ்வாறே இந்நூலுக்கும் குருசாமி கதை என்றே பெயரிடப்பட்டுள்ளது.

நூலாசிரியர்

நாட்டுப் புறக்கதைப் பாடலாக இருப்பினும் இக் கதையினைச் சொன்னவர் வேலாயுதப் பெருமாள் மகன் சுப்பிறமணியன் என்ற குறிப்பும் நூலுள் காணப்படுகிறது. மேலும் அவர் வாழ்ந்த நாடு, ஊர் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

'அன்ம்புடனே வந்த கதை யின்ம்பமுடன் சொன்ன
மலை நாடு கோடை நகர் வேலாயுதப் பெருமாள் மய்ந்தன்
சுப்பிறமணியன் மகிள்ந்துரைத்த புஞ்சொல்'

(39—41)

பல நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் ஏட்டில் எழுதி கிடைக்கப் பெற்றாலும் நூலாசிரியர் பெயர் கிடைக்கப் பெறு வதில்லை. ஆனல் இந்நூலில் நூலாசிரியர் பெயர் முழு விவரங்களுடன் குறிப்பிடப் பட்டிருப்பது அறிந்து மகிழ்தற் குரியது.

நூலின் காலம்

நூல் எழுதிய காலமும் நூலுள் காணப்படுகிறது.

சங்கை பெறு தொள்ளாயிரத்து
நாற்பத்தி நாலாம் மாண்டு தயவு பெறு மானிலத்தில்
யிருபத்தொன்றில் யெங்கு மதிசெயமான மாந்தை வாரம்
இன்பமுறு ரோகணியாம் திறியேதேசி கங்கை தும்பை
அரவணிந்த பண்டாரத்தின் காவியத்தை யானுலகில் [சிறிது
சொன்னேன்............................"

(335—340)

அதாவது சிறப்பு மிக்க தொள்ளாயிரத்தி நாற்பத்து நான்காம் ஆண்டு என்று எழுதப்பட்டுள்ளது. மேலும் இவ்

வாண்டு தமிழாண்டு என்றே கூறப்படுகிறது. தமிழாண்டு இப்பொழுது 1152 ஆகையால் இந்நூல் இருநூற்று எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது என உரைக்க முடிகிறது. அதாவது இந்நூல் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தது ஆகும்.

நூல் அமைப்பு

இந்நூலின் அமைப்பினை மூன்று பகுதிகளாகக் கொள்ள லாம். முதற் பகுதியில் குருசாமி முனிவர் வேள்வியில் தோன்றி வளர்ந்த வரலாறு உணர்த்தப்பட்டுள்ளது. இரண்டாவது பகுதியில் அம்முனிவர் பவனி வருகின்ற சிறப்பும், அவர் தம் அருமை பெருமைகளும் கூறப்பட்டுள்ளன. இறுதிப் பகுதி கும்மிப் பாடலாக அமைந்து அம் முனிவரின் சிறப்புத் தன்மைகளையும், அவர் திருவனந்தபுரத்தில் சென்று திருமாலைக் கண்டு வணங்கிய செய்தியினையும், பின்னர் முனிவர், திருமால், சிவகாமி ஆகியோர் வாகனமேறி வருவதையும் எடுத்தியம்புகிறது.

கதைச்சுருக்கம்

கயிலாயத்தில் தேவர், முனிவர், தவத்தியர், தானவர், வானவர் அனைவரும் ஒருங்கு கூடிச்சிவனைத் தொழுது வேண்டி தங்களுக்கு உபதேசம் (அறிவுரை) நல்க ஒரு முனிவர் வேண்டும் என்றனர். உடனே சிவனுரும் திருமால் கணபதி இவர்களோடு கலந்துரையாடி, இவர்கள் வேண்டுதல் என்ன வேடிக்கையாக உள்ளது என்றார். பின்னர் சிவனுரும் மனமிரங்கி தேவர்களுக்குக் கூறுவார். நீங்கள் தேவருலகில் காக்காச்சி மலைதனிலே, கருவன் திட்டப் பாறையில் நீங்கள் வேண்டும் குருவானவரை எலுமிச்சம் பழத்தில் பிறவி செய்து வேள்வி செய்யுங்கள் என அன்பு மொழி பகர்ந்தார். தெய்வார் அனைவரும் விடை வாங்கி மீண்டனர்.

இறைவன் ஆணைப்படி அவர்கள் காக்காச்சி மலைதனைக் கண்டு, கருவன் திட்டப் பாறையையும் கண்டனர். அடுத்து வேள்விக்குரிய ஏற்பாடுகள் அனைத்தையும் செய்தனர். குற்றேவற் காரர்களைக் கொண்டு வேள்விக்குரிய தலத்தினை வெட்டி சரி செய்தனர். பின்னர் பல் வகையான அலங்காரங்களையும் செய்தனர். வாசனைப் பொருட்களாலும் நறுமணம் பரவச்செய்தனர். தாம் வேண்டும் முனிவரின் உருவத்தினையும், மேலும் பல அலங்கார உருவங்களையும் எழுதினர். அம்முனிவர் சடை முடியுடன் திருநீற்றுக் கப்பறை திருப் பிரம்பு, சுரையோடு இவைகளைத் தாங்கியிருந்தார். காதிலே கடுக்கனும், கையிலே மழு வாளும், அரையிலே கச்சு வேட்டியும் கொண்டிருந்தார். உடலெல்லாம் வெண்ணீறும் கழுத்திலே உத்திராச்ச மாலையும் அணிந்திருந்தார்.

அடுத்து முனிவர்களும், குற்றேவற்காரர்களுமாய் வேள்விக்குரிய மரங்களை எடுத்து வரச் சென்றனர். பல்வகை மரங்களைக் கண்டு அவைகளுள் பல ஆகாது என வொதுக்கி விட்டுச் சந்தனம், குந்திருக்கம், தேக்கு, செண்பகம் போன்ற இவைகளே ஆகுமென்று கருதி அவைகளைத் தேர்ந்தெடுத் தனர். பின்னர் அம்மரங்களை வெட்டிச் சுமந்து வந்து ஒழுங்காக அடுக்கி பெண்டிர் நின்று குரவையிட வேள்விக்

காக எரியூட்டினர். சாம்பிராணி சூடகம் போன்ற நறுமணப் பொருட்களை வாரித் தூவினர். மண மலர்களை வாரி வீசினர். அக்கினி பொங்கி எழுந்தது.

வேள்வி இவ்வாறு நடை பெறவே குருதவசி (முனிவர்) உருவமானது தோன்றிப் படிப்படியாக வளர ஆரம்பித்தது. தேவர்கள் போற்றி நின்றனர். அப்பொழுது அம்முனிவர் பல்வகை ஆடை ஆபரணங்களோடு தோன்றலாயினர். முனிவர்கள் பூம் மாரித் தூவி, குரவையிட்டு அடி தொழுது நின்றனர். தோன்றி வருகின்ற முனிவரின் உருவம் சிவனாரின் மறு உருவமாகவே காட்சியளித்தது.தேவர்கள் உருவெடுத்து வந்த முனிவரை அழைத்துச் செல்ல பல்லக்கு ஏற்பாடு செய்தனர். இசைக் கருவிகள் இன்னிசை முழங்கி நின்றன. குருதவசி முனிவரானவர் பல்லக்கிலேறி பவனி வரலாயினர். அவர் பவனி வரும் பொழுது அவரது அருமை பெருமைகள் பேசப்படுகின்றன. அனைத்தும் சிவனாரின் செயல்களேயாகும். மேலும் அவரது அங்க அலங்காரங்கள் அழகுற கூறப்படுகின்றன; அவையனைத்தும் சிவனாரின் அங்க அலங்காரமேயாம். எனவே தோன்றி வந்த முனிவர் சிவனார் என்பதை அறிய முடிகிறது.

அடுத்து அம்முனிவர் பரிவாரங்களுடன் புடைசூழ ஆடிப்பாடி பவனியாகச் சென்று, பல்வேறு இடங்களையும் கடந்து, திருமால் உறைகின்ற திருவனந்தபுரத்திற்கு வந்து, திருமாலைக் கண்டு திருமாலையும் தொழுது நின்றார். பல்வகைப் பூசைகள் நடைபெறுகின்றன. பின்னர் மீண்டும் பல்லக்கில் ஏறினார். அபபொழுது திருமால் பருந்து வாகனத்திலும், சிவகாமி அம்மையார் பொன் தேரிலும் ஏறி வந்தனர். எல்லோரும் கூடி வர முனிவர் மகிழ்ந்திருந்தனர் என்பதோடு கதை முடிவுறுகிறது.

பிற செய்திகள்

இந்நூலுள் கூறப்படுகின்ற முனிவரின் அங்க வருணனைகளும், அரும் பெருஞ் செயல்களும் பெரிதும் இடைக்காலத் தமிழ் இலக்கியங்களில் சிவனாரைப் பற்றிக் கூறியனவாக உள்ளவைகளே.

அங்க அமைப்புகளாக மூன்று கண்ணுள்ளவர்; கறுத்த கண்டத்தை உடையவர்; அரவினை ஆபரணமாகப் பூண்டவர்; பெண்ணை ஒரு பங்காகக் கொண்டவர்; மாறி நின்றாடி ஒரு கால் தூக்கி நிற்பவர்; சடையுடையவர்; ஆறு தலையில் வைத்தவர் என்பவைகளெல்லாம் சிவனுக் குரியவைகளே. அரும் பெருஞ் செயல்களாக அண்டமும் பிண்டமும் இல்லாதவர்; இறப்பும் பிறப்பும் இல்லாதவர்; மறப்பும் நினைப்பும் இல்லாதவர்; வெள்ளெருதின் மேலேறி வருபவர்; பேரும் ஊருமில்லாதவர்; பிச்சைக் காரனாய் ஊர் ஊராய்ச் சுற்றித் திரிபவர்; கணபதி ஆறுமுகனைப் பெற்றவர்; தக்கனை மாமனாகக் கொண்டவர்; முப்புரம் எரித்தவர்; யமனைக் கொன்றவர்; காலனைக் காலால் மிதித்தவர்; குறத்தியாகிய வள்ளிக்கு மாமனானவர்; தக்கனின் தலையை அறுத்தவர்; கண்ணப்பன் எச்சிதனைத் தின்றவர்; சிறுத் தொண்டன் மகனைக் கறியாக்கி உண்டவர்; பாண பத்திரனுக்காக விறகு

சுமந்தவர்; எங்கும் நிறைந்திருப்பவர்; தண்டை, சிலம்பு பூண்டுத்திரு நடனமாடுபவர் என்றெல்லாம் பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. இச்செய்திகள் தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் போன்ற நூற்களிலும் காணப் படுபவைகளேயாகும். எனவே இந்நூலாசிரியர் சைவ சமய இலக்கியங்களில் நன்குத் தோய்ந்தவர் என்றும் அவ்விலக்கியங்களின் தோய்வே இப்புலவரது பாடலை அணி பெறச் செய்கின்றது எனலாம். மேலும் இந்நூலாசிரியர் பக்தி இலக்கியங்களில் தோய்ந்தவர் என்பதை நூல் முதலில் கந்தன் காப்பில் அமைந்து வருகிற ''ஏறி மயிலேறி விளையாடு முகம் ஒன்றே'' என்னும் பாடலையும் நூல் முடிவில் திருப்புகழ் என்னும் தலைப்பின் கீழ் ஆறு பாடல்களையும் எடுத்தெழுதியுள்ளமை நன்கு உறுதி செய்கின்றது.

இந்நூலுள் முனிவர் பவனி வருவதிலிருந்து இறுதி வரையுள்ள பாடல் அமைப்பு பெண்கள் பாடுவதாக அமைந்துள்ளது. அதுவும் வினவிப் பாடும் முறையிலும் அமைந்துள்ளது. மேலும் ஒரு முறை வரப் பெற்ற தொடரோ சொல்லோ மீண்டும் மீண்டும் இடம் பெறுவது பொதுவாக நாட்டுப்புறப்பாடல் பண்பாகும். அம்முறை இந்நூலுள்ளும் பரவலாக அமைந்து நூலினைச்சிறக்கச் செய்கிறது எனலாம்.

நூலுள் சிற்சில இடங்களில் செய்திகள் தொடர்ச்சியற்று உள்ளன. மேலும் சில பகுதிகள் எளிதில் புரிந்து கொள்ளுமாறும் அமையவில்லை. நூலுள் முழுவதும் இலக்கியத் தமிழும் பேச்சுத் தமிழும் விரவிக் காணப்படுகின்றன. குமிரி மாவட்ட வழக்குச் சொற்கள் நிரம்ப இடம் பெற்றுள்ளன. எவ்வாருயினும் இந்நூலை ஒரு சிறந்த நாட்டுப்புறக் கதைப் பாடல் எனக் கொள்ளலாம்.

மதுரை
10—11—1976

இவை
டாக்டர். தி. நடராசன்

குறுக்க குறியீட்டு விளக்கம்

(பே.வ.மா) : பேச்சு வழக்கில் மாற்றம்

( ) : இக்குறியீட்டின் உள்ளிருக்கும் எழுத்து பதிப்பாசிரியரால் நூலுள் தேவை எனக் கருதப்படுவது.

[ ] : இக்குறியீட்டின் உள்ளிருக்கும் எழுத்து பதிப்பாசிரியரால் நூலுள் தேவையில்லை எனக் கருதப்படுவது.

முதல் ஓலை.

ஸ்ரீ ராம செயம்
அரி ஓம்
நன்ருக
குருவே துணை.
பட்டாலியன் விளை ஊரிலிருக்கும்
நீலவடிவு நாடார் மகன் நீல பெருமாள்
நாடார் படித்து வருகிற குருசாமி
கதையாடு. ஆனந்த களிப்பு முகிள்ந்தது
முத்தும் சரசோதி முன்னிக்க யகம பந்தும்
சத்தி நிற்க்க சிவன் நிற்க்க சத்தியும் சிவனும்
ஒத்து நிற்க்க சிவா' வேலு உண்டும் வினை
யில்லை. சிவகுருவே துணை நன்ருக சிவா
ஊர் தளைக்க நாடு தளைக்க சிவ(ா) படித்தவர் தளை
க்க சிவா. பூசித்தவர் தளைக்க பூலோக மெங்கும்
ஆயனே...... ன்னை சிவா.
அருளாசியே சிவனும் உமையம்மனும் மனம் மகிளெ
அமர் கண் டங் கவாளிரு பேரும் வரும் நேரம்
மருளாகியே கரிகள் மதம் மீறி மைய்யலாக
மதமை நீர் பெருகி சிலர் மருவி விளையாட
சிவனர் மனங் கண்டு மனந் தெளிவி லொளிவாகி
சிவனர் பதம் போற்றும் சிலர் மாதர்கருள் பெருக
தவ மேவியே கரிகள் குணதலத்தில்லதிச (ய)த்தை
தளைக்கும்ங் குருபரன் வந்து தவருதருள் தருவாயே
மயக்கந் தெளிந்தவர்க்கு நல்ல மதை யானைகள்
உருவாய்

மாயம்மா யிருபேரும் மருவி விளையாட
சிக்கந் தெளிந்தவர்க்கும் நல்ல யிலங் கும் பலகலநூல்
ஈரேளுலகோருக்கும் பலதேவர்கள்......மரபுக்கும்
கலங்காதன போரும் ஒன யேக வொரு பாக
கன்னியுமை போங்கும் நல்ல காரானைகள் உருவாக
துலங்கும் பிறகாசம் அயா......கரமேந் துணையாக
......காலை யுமைப் புகள்வாய் உன்னை தொழுவோர்க்
[கருள்வாய்

இலங்கும்ப் பொரிகடல பயறும் பளு பல கனியும்

இளனீர் பல வடையும் படைத்தினமும்-உம்மைத்
[தொளுவோம்

மலங்காதருள் தருவா(ய்) புத்தி மனதி லனுதினமும்
மாயன்ஞரு மருகோனே யென்னருளக் குடி கொள்வாய்

பட்டாலியன் விளை—இவ்வூர் குமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் கோட்டாறு சந்திப்பிலிருந்து பிரிந்து செல்லும் ஈத்தாமொழி சாலையில் ஒன்ருவது கல் தொலைவில் அமைந்துள்ளது.

ஏடு > யாடு (பே. வ. மா)

முகிள்ந்தது - முடிந்தது.

உண்டு என்பதை உண்டும் எனக் கூறுவது குமரி மாவட்ட வழக்கு.

அனபேரும் > அனபோரும் (பே. வ. மா)

கடலே > கடல (பே. வ. மா) பழு > பளு (பே. வ.மா)

இவ்வோலையில் எழுதப்பட்டிருக்கின்ற எழுத்தும், நூல் எழுதப்பட்டிருக்கின்ற ஓலையின் எழுத்தும் வேவ்வேருய் அமைந்துள்ளன. இவ்வோலை பின்னர் (நூல் எழுதாத) ஒருவரால் எழுதி இணைக்கப்பட்டிருக்கலாம். மேலும் செய்தி முழுமையும் இறை துதிப் பாடலாகவே உள்ளது. சுவடி யாரால் பயன் படுத்தப் பட்டது என்ற குறிப்பும் உள்ளது.

—o—

குருசாமி கதை

கணபதி காப்பு.

சீருறு கயில மேவுஞ் சிவகுருவே அருளிநாலே
பலம் பெற வேள்வி செய்து
பல பல தெய்வார்க் கெல்லாம்
வார குருதவசி அய்யா வந்திடும் வளமை கூற
காருறைகும் பகமற கிணபதி காற்ப்பதாமே

நாயகன் காப்பு

உத்தமா முனிவர் தேவர் ஓ (ெ) ரளுத்தறிவாய் தேறி
முத்தியா உபதரிக்க முக்கண்ணன் அருளினாலே
வெத்தியா யிக்குரு சன்னாசி வேள்வியில் பிறந்துவந்த
நல்த்தமிள் தெரிந்துபாட நாயகன் காற்ப்பதாமே

முருகன் காப்பு

அஞ் (ெ) சளுத்தும் மூன்றெளுத்ததுவும்
யெட்டெழுத்தும்ந்தானாய்
அறுபத்தி நாலு கலைக்காண்மை அட்டாங்க மனான
பஞ்ச பட்சி
அரி பதிநெட்டும் பாசை பலகலைநூல் தத்துவமும்
தொண்ணாத்தாறும் நெஞ்சறிவாய்ப் பிறந்து வந்த
குருதவசி அய்யா நீணிலத்தில் வந்த கதை கூற
குஞ்சரத்தோன் தனக்கிளய செந்தூர் கந்தன்

---

3. தெய்வார் — தேவர்கள்
5. கணபதி > கிணபதி (பே.வ.மா.), காப்பதாமே > காற்ப்பதாமே (பே.வ.மா.).
8. வெற்றி > வெத்தி (பே.வ.மா.), சன்னியாசி > சன்னாசி (பே.வ.மா.)
9. தமிழ் > தமிள் (பே.வ.மா.)
10. அஞ்செழுத்து > அஞ்செளுத்து (பே.வ.மா.)— பஞ்சாக்கரம். அஞ்சுவனம்.
மூன்றெழுத்து > மூன்றெளுத்து (பே.வ.மா.)
எட்டெழுத்து—விஷ்ணு மந்திரம்.
12. அரி—நெடுங்கணக்கு
10.–13 இவ்வரிகளில் எழுத்து, மொழி, கலை, தத்துவம் பற்றி விளக்கப்பட்டுள்ளன.

குமர குருபர முருகன் காற்ப்பதாமே
யேறி மயிலேறி விளையாடு முக மொன்றே
ஈசனுடன் ஞன்ன மொளி பேசு முக மொன்றே
கூறு மடியார்கள் வினை தீற்கும் முக மொன்றே
குன்ருத வேல் வாங்கி நின்ற முக மொன்றே

வள்ளிய மணம் புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான வடியா னறிய வேணும்
ஆதியரு ணசலா யமந்த பெருமாளெ
அரகரா நமசிவாய
நமசிவாய
யநம சிவாய
வா நமசி
சிவ ய நம
ம சிவ யந
கார (ா) ருஞ் சிவனு உமையும் சிறந்த கயிலாசம்

சித்தம்பலத்தர் வாளுகின்ற தெய்வ கயிலாசம்
பாரிலேளு உலகமெங்கும் பரந்த கயிலாசம்
பகவானும் சந்திரனும் பதியுங் கயிலாசம்
ஆரிய்யனும் பிரமாவும் அமந்த கயிலாசம்
ஆனை நந்தி தேவர் காணிக் கயிலாசம்

பெருகு வெற்றிக் கயிலாசம் பறுபதத்தின் மீதே
பெருத்தவ மாமுனிவர் உரைக்குங் குருவாக
அலையாம லக்குருதவசி அய்யா அவர்தன்னுல்
அன்ம்புடனே வந்த கதை யின்ம்ப முடன் சொன்ன
மலைநாடு கோடை நகர் வேலாயதப் பெருமாள்

---

18. ஞன்ன—இனிய (ஞான), மொழி > மொளி (பே.வ.மா)
21. வள்ளிய > வள்ளிய (பே. வ. மா.)
30. கைலாசம் > கயிலாசம் (பே. வ. மா.)
31. சிற்றம்பலத்தர் > சித்தம்பலத்தர், வாழுகின்ற > வாளுகின்ற (பே. வ. ம.)
32. ஏழு > ஏளு (பே.வ.மா)
34. அமர்ந்த > அமந்த (பே.வ.மா)
36. பருவதம் > பறுபதம் (பே.வ.மா)
40. மலை நாடு — மலையாள நாடு (கேரள மாநிலம்), கோடை நகர் — ஊர்ப் பெயர்

மய்ந்தன் சுப்பிறமணியன் மகிள்ந்துரைத்த புஞ்சொல்
நீதி தவருத திருமாதரும் மென்ணுவில்
நிமலன் னருளாயிருக்க நினைத்த கதை தன்னை
ஆதி மதயானை முகத்தோனருளப் போத்தி
அன்ம்புடன் உரைத்த கதை யின்பமுடன்ங் கேளும்

சிவனயன்மால் மூன்றும் மொன்ருய் தெளிவிலா ஒளிவ
ாகி சிவஞான பரம குருந்தேறு மறிவதனுல்
தவமுனிவர் தவத்தியர்கள் தானவர்கள் வானவர்கள்
தரங்கும்ங் கயிலாசமதில் தங்கள் தினந்தோறும்
யெல்லோரும்ஞ் சந்தோசம (ா)க யினிதிருக்க

ஈசுரனைத் தொழுது தவ மா முனிவரெல்லாம்
சொல்லரியெ சிவசிவா சோதி நகமணியே
சூச்சமதி லடங்காத சுக ஞானக் கொழுந்தே
நல்லாற்க்கும் பொல்லாற்க்கும் எல்லாற்க்கு ஒன்ருக
ஞாயம் நடுநீதி வெகு நல்லிரக்கமுள்ள

வன்னக் கயிலாசமதில் வாழுமணி விளக்கே
வருசை பெற யெங்களுக்கு உபதேச நல்க
நல்ல திரு வாகனருள் வேணு மினி யென்ன
நாயகனைத் தொழுது தவமான முனிவரெல்லாரும்
அந்த உரைதனைக் கேட்டங்காதி பரனும்

ஆனை திருமாலோடே அவரேது சொல்லுவார்
வல்ல புகள் முக்கோடி தேவர் முனிவார்க்கும்
வருசை பெறு உபதேசம ருழுங் குருவாக
சொல்லரிய குருதவசி அய்யாவர தம்மை
சூச்சம்முடன் பிறவி செய்ய சொன்னுல் திருவாகன்

---

41. மைந்தன் > மய்ந்தன் (பே.வ.மா)
44. போற்றி > போத்தி (பே.வ.மா)
49. தரங்கும் — வாழும்
52. நவமணியே > நகமணியே (பே.வ.மா)
52-56. சிவனது தன்மைகள் கூறப்பட்டுள்ளன.
56. வன்ன > அழகான
57. வரிசை > வருசை (பே.வ.மா)
59-60. நாயகன், பரன் — சிவன்.
63. அருளும் > அருழும் (பே.வ.மா)

அரியோனும் முனிவரோடு ஆனந்த போதனரும்
ஆடும்ப் பூதலமே தென்றல்லோருமே கேள்க்க
பெரியோனுந் திருமனது புகள்ந்து கதி கூற்ந்து
போத்தி நின்ற தெய்வார்க்கு யேத்தபடி சொல்வார்
காக்காச்சி மலைதனிலே கருவன் திட்டப் பாறை
கருக நல்ல வேள்வி செய்து குருதவசி தன்னை
பளத்தில் யிலுமிச்சம் பளமதில்ப், பிறவி செய்து
பாங்குடனே வாருமென பரமன் அருள் செய்தார்
சொல்லரிய முக்கோடி தெய்வார் முதல்லோர்கள்
சூள்ந்த (வ) னை தொழுது விடைகொண்டு வந்தார்
நடந்தார் தெய்வரெல்லோரும் நாதனைத் தொழுதுகொண்டு
அடந்த தெய்வக் கயிலைவிட்டு அரகரா சிவன்யென்னே
துடந்தவர் பொயிகை தன்னில் தீர்த்தமாடி
கடந்தருள் புரிய தெய்வார் கடு (க) வேதான்
சிவனரருள் புரிய தெய்வார் (வீத்) திருந்தார்
சீராகவே கூடு கொம்பு மலையுங் கடந்தார்
தவமாகிய சருகுமலை சார்வுதன்னில் வந்தார்
தவருதிருள் வேள்விசெய்ய தலங்கள் சுத்திப் பார்த்தார்
பார்த்தார் காக்காச்சிமலை பாறைதனி லேறி
பரமனருள் புரிந்ததலம் விரவாக சென்று கண்டார்
ஏத்த திசை யெட்டுஞ் சுத்திப் பார்த்தே தெய்வார்கள்
யிதுவே வட்டப் பாறை வேள்விக்கு செந்தலம் மென்று
கூன்று தெய்வார் இங்கிலியர் கூட்டிவந்தன்னேரம்

---

67. கேட்க > கேள்க்க (பே.வ.மா)
68. கூர்ந்து > கூற்ந்து (பே.வ.மா)
69. போற்றி > போத்தி (பே.வ.மா), யேற்றி > யேத்தி (பே.வ.மா)
76. அடர்ந்த > அடந்த (பே. வ. மா.)
78. தொடர்ந்து > துடந்து (பே.வ.மா)
79. கடுக — விரைவாக
83. சுற்றி > சுத்தி (பே.வ.மா)
85. விரைவாக > விரவாக (பே.வ.மா)
37. செந்தலம் — செம்மையான இடம்
88. கூண்டு > கூன்று — கூடி
88. இங்கிலியர் — குற்றேவற்காரர். கிங்கிலியர் என்றும் பாடம்.

கொண்டு வர வேணும்ங் குட்டை கூந்தாலி முதலாய்
தேறும்படி தெய்வாரை தெளிவாக கேட்டு
திடமாய் குட்டை கூந்தாலியுஞ் சேரக் கொண்டு வந்தார்
அருந்த முனிவருடனரு ளாகிய தெய்வார்
அரகரா வென்று வேள்வி அருள்பெற வெட்டுவாராம்
என்றுரைக்க இங்கிலியர் எல்லாரும் ஒருமுகமாய்
யேத்தநல்ல வேள்விக்கிசைந்த வகையெல்லாம்
குளஞ்சேர் கழுகுமலை கூண்டதோர் தெய்வார்கள்
கூடுமலைக்கு நடுவெழுந்த வடசார்வில் வந்தார்
வேள்விக்குத தலம்ங் குறிக்க விண்ணப்பங்கள் சொல்லுவராம்
வேண்டுந்த் தெய்வார்களோதும் வேதங்கள் போதம் முளங்க
நாழும் பஞ்ச வாச்சியங்கள் நாக சர முளங்க
நல்ல மலங் கன்னியர்கள் எல்லாரும் குரவையிட
வாழுஞ் சங்கு சேகண்டி வலம்புரி நின்ருேலமிட
வார்த் தூவிச் சாம்பிருணி தீபதும்மங் காட்டுவராம்
ஆழுகின்றே வேள்விக்கருளி அளந்து பெருக்குவாராம்
அன்பத்தோரடி வீதியின் அகலமாய்த் தானங்கண்டார்
நீளம் அறுபத்தி மூன்றும் நேரே பத்தடியளந்து
நிமலந் திருவருளால் நின்று வேள்வி வெட்டுவராம்
ஓராள் பரிசம் வெட்டி உயர்ந்த படியும் வைத்தார்
உள்ளும் பிறமும் அரிந்து ஒழுங்காக வெட்டுவராம்
யீராள் பரிசம் வெட்டி யேரு மூலையாத் திருத்தி

---

89. கூந்தாலி — மண் வெட்டி போன்ற கருவி
96. கூண்ட — கூடிய
99. வாச்சியங்கள் — இசைக்கருவிகள்
99. நாதசுரம் > நாக சரம் (பே.வ.மா)
102. சங்கு, சேகண்டி, வலம்புரி—ஒசை செய்யும் கருவிகள்
103. தூபம் > தும்மம் (பே. வ. மா.)
105. ஐம்பத்தோரடி > அன்பத்தோரடி (பே. வ. மா.)
108. பரிசம்—ஆழம்
109. புறம் > பிறம் (பே. வ மா.)

இதமாக யேறப்படி யிறங்கப்படியும் வைய்த்தார்
முளுள் பரிசம் வெட்டி மூலை ஒ முங்காய்த் திருத்தி
முன்னும் பின்னும் இங்கிலியார் உன்னி உன்னி
வெட்டுவராம்
நாலாள் பரிசம் வெட்டி நகப்படியும் வைய்த்தாராம்
நாலு மூலையுந் திருத்தி நடுவில் ஒனித்து வெட்டி

அஞ்சாள் பரிசம் வெட்டி அறுகோணுந் திருத்துவராம்
ஆருள் பரிசம் வெட்டி அளந்து பெருக்குவராம்
ஏளா (ள்) பரிசம் வெட்டி யேளுகோணுந் திருத்துவராம்
எட்டு ஒன்ம்பதாள் பரிசம் வெட்டி இடைவிடாமல்
வெட்டுவராம்
பத்தாள் பரிசம் வெட்டி பாறை வந்துதித்திடுமாம்

பதிஞேரு தானங்கண்டு டிகளெல்லாம்ந் திருந்தி
உத்த வேள்வி வெட்டிக் கண்டு உயர்ந்த கரையிலேறி
உடையவனருளாலெ வேள்வி உடனலங்கரியும்
மென்ருரே
வேள்வி சிகர் தங்கம்பூசி மேலே நாக செம்பெழுதி
விழும்பில் நகரெத்தினம் பதித்தாரே

தாள்வில்லாத வேள்வி தன்னில் சார்ந்து சுரைதுதான்
தேரறித்து
சந்தணத்தால் கோலம் விடுவராம்
எண்ணரிய தன்னில் யேத்த சிகர் நாலுதிக்கும்
இந்திரன் உருவெழுது வராம் திண்ணமுடன் சூரியன்ம்
சிகரிலுருவெழுதி
தென்நது சந்திரனெழு(து)வராம் அன்னமும் தாருவும்
அருகமயிலும் மெழுதி

---

116. ஐந்தாள் > அஞ்சாள் (பே. வ. மா.)
118. ஏழாள் > ஏளாள் (பே. வ. மா)
119. ஒன்பது > ஒன்ம்பது (பே. வ. மா.)
122. உயர்ந்த > உயந்த (பே. வ. மா.)
124. சுவர் > சிகர் (பே. வ. மா.)
125. நவரெத்தினம் > நகரெத்தினம் (பே. வ. மா.)

அணிப்பிள்ளை உரு எளுது வராம்
வன்னப்ப பூனுலுதிக்கும் தென்ன பூ உருவெழுதி
மதை யானை உருவெழுதுவராம்
தவசி சன்னுசியுஞ் சடையு முடியு மெழுதி
தவ பர உரு வெழுதுவராம்
திரு நீத்துக் கப்பறையும் திருப்புரம்பும் மெழுதுவராம்
திருந்த சுரை ஓடெழுதுவராம்
கச்சி வேட்டியும் புலித்தோல் கயில் மழுவாளெழுதி
காத்திலே செம்பு வெழுதுவராம்
உடலில் வெண்ணீ றெழுதி உன்டே சடையெழுதி
உத்திராச்சம் மேலெழுதுவராம்
பூமலர் நந்தவனப்பூ பொன்னரிய தாமரைப் பூம்
புகழும் பச்சைமா லெழுது வராம்
கமலரும் செண்பகமும் கன்னல் கதலியெழுதி
கமு(க)ம்பூ உருவெழுது வராம்
உருவான வேள்விதன்னில் உள்ளும் பிறமும் மெழுதி
உச்சக் கரையிலேறு வராம்
எழுதரிய கிங்கிலியார் யேழு மலையுந் திரிந்து
எடுத்தாரே சாம்பிராணி குந்திருக்கம்
நாழுமந்த வேள்விக் கேத்த நல்லதோர் மரங்கள் தேடி

---

131. அணிலை, அணிப்பிள்ளை எனக் கூறுவதும் ஒரு வழக்கு.
132. வன்ன — அழகான
136. கப்பறை — திருநீறு போன்ற பொருட்கள் வைக்கும் பாத்திரம்
136. பிரம்பு > புரம்பு (பே. வ. மா.)
138. கச்சு > கச்சி — திண்ணமான
138. கையில் > கயில் (பே. வ. மா.)
141. உத்திராச்சம் — உத்திராட்ச மாலை
146. புறம் > பிறம் (பே. வ. மா)
149. சாம்பிராணி, குந்திருக்கம் — வாசனைப்பொருட்கள்
150. நாளும் > நாழும் (பே. வ. மா) — நாள் முழுவதும்

நாங்கு மலை தன்னிலே வந்தார்
வட்டமில்ல மாமருது வண்டாளை குருந்து நெல்லி
வல்லி பூரங் கொல்லியு மாகாது
கூட்டமாகாக் குயிலும் குருவ[illegible]சி மஞ்சணத்தி
குமிளிலுப்பை வேங்கையு மாகாது

அத்தி யித்தி ஆலரசி அடுக்காய் கடுக்காய் நெல்லி
ஆத்தியும் திருவாதறியு மாகாது
வேத்தி கருங்காலி நாவல் வில்லி பூரங்கொல்லி குமிள்
வேங்கைக்கு வேங்கையு மாகாது
ஆலரசி, பூவரசி அளி, புளி தே இலுபை

அணைஞ்சி குருவிஞ்சி யு மாகாது
பல்லுவை கல்லுவை படத்தி வெள்ளாளி புன்னை
மாலையும் வெப்பாலையு மாகாது
கண்டதோர் மரங்களெல்லாம் களித்து களித்து விட்டு
காடு மலை தோறும் தேடுவராம்

தண்டமிள் சேர் பொய்கை வனந்தான் கடந்து கிங்கிலியர்
சந்தண நாடான் மலையில் வந்தார்
தேடறிய சந்தணமுந் திடமான குந்திருக்கம்
தெளிந்த வேள்விக்கு யாகுமென்று சொல்லி
ஆடலுடன் பாடலுமாய் அரகரா போத்தியென்று

அளந்து குந்தி(ரு)க்கம் வெட்டு வராம்
சந்தணமு குந்திருகம்ந் தறித்து வகையாக
சார முளக் கோலால் அளப்பராம்

மாமருது, வண்டாளை, குருந்து, நெல்லி என்று தொடங்கி பல்வகை மரப்பெயர்கள் கூறப்படுகின்றன. இச் செய்தியும் குறிஞ்சிப்பாட்டில் கபிலர் தொண்ணூற்றுன்பது வகைப் பூக்களை தொகுத்துக் கூறுவதோடு ஒப்பு நோக்கத் தக்கது.

164. களித்து களித்து விட்டு — வேண்டாம் என ஒதுக்கி விட்டு
166. தண்டமிழ் > தண்டமிள் (பே. வ. மா)
169. போற்றி > போத்தி (பே. வ. மா)
173. சார முளக்கோல் — நீண்ட முளக்கோல்

விந்தையுடன் கிங்கிலியர் வெட்டித்தலைச் சுமடாய்
வேடர்மலைக் காடது கடந்தார்
தெய்வார்கள் பூமலர்கள் தேடியெடுத்த மலைமேலே
தெளிந்தார் சாம்பிருணி குந்திருக்கம்
கய்யாரவே யெடுத்து காடு தென்னங் கூடையிலே
கண்டகண்ட பூமலர்க ளெல்லாம்
நாழுமந்த கிங்கிலியர் நல்ல தெய்வாரோடே கூடி
நூறு மலர்கள் கூடையில் கொண்டு வந்தார்
கூற்றிய வேள்விக்குள்ள கொப்பு வகை கொண்டு வந்து
கொடுத்திடதெய்வார் வேண்டி குறையறவேள்விசெய்தார்
செய்யத்திரு வேள்விதன்னில் தீபதூபங் காட்டுவராம்
சேரத் தெய்வார் பூமலர்கள் வாரி வாரி தூவுவர்ராம்
அய்ய பஞ்ச வாச்சியங்கள் சூழும்ங் கடல்போல் முளங்க
துரிசமாக் கன்னியர்கள் சூள்ந்து குரவையிடெ
சிவசிவா யென்று தெய்வார் திருநாமம் ஓதுவராம்
தவமான மாமுனிவர் தங்கள் முறை வேதம் ஓத
தக்க வேள்வி செய்யத் தெய்வார் ஒக்க ஒன்று கூடிருந்து
குந்திருக்க மரத்தை வெட்டி குத்தி குத்தியாய் தறித்து
குருவே நினைந்து தெய்வார் கொண்டு போயி அடுக்குவராம்
சந்தனமும் குங்குமாவும் தனித்தேக்கு சென்ம்பகமும்
தறித்து குறித்து தெய்வார் தாங்கலா அடுக்குவராம்

---

174. தலைச்சுமடு — தலைப்பாரம்
178. தென்னங்கூடை — தென்னை ஓலையினல் செய்யப்பட்ட கூடை.
182. கொப்பு - இலைகள் நிறைந்த கிளை
186. பஞ்ச வாச்சியங்கள்—ஐவகை இசைக்கருவிகள்
187. துரிதமாக > துரிசமா (பே. வ. மா) — விரைவாக
190. ஒக்க—ஒன்று சேர்ந்து (ஒருங்கு கூடி)
191. குத்தி குத்தி—சிறு சிறு துண்டுகள்
192. போய் > போயி (பே. வ. மா.)
193. குங்குமம் > குங்குமா (பே. வ மா.)
செண்பகம் > சென்ம்பகம் (பே. வ. மா.)
194. தாங்கலா—ஒன்றன்மேல் ஒன்ருய் ஒழுங்காக

ஆறு கோட்ட குந்திருக்கம் அடி வேள்வியில் தானிப்பராம்
அதின் மேலே தூடகமும் அடுக்கடுக்காக வைய்த்து
ஏழு கோட்டை சாம்பிராணி யிடையிலே தாவிப்பராம்
எண்ணரிய பிச்சி மலர் யெங்கு மலங்கரிப்பார்
வாழும்ந் தெய்வ கன்னியர்கள் வளைந்து குரவையிட
வன்ன வேள்விதன்னில் வேய்வார் வடவர் முகத்தையேவீ
கூறி அணல் மூட்ட வேள்வி கொடும்புகை வானமுட்ட
கொழுந்து விட்டு அக்கினியும் எங்கு எரிந்திடவே
மாறில்லா நாகசரம் மல்லாரி கொம்பு முளங்க
மாய முனிவோர் தேவர்கள் பூமாரிகளாய்ச் சொரிய
யீசனருளால் முனிவர் யேத்த திருநீத்தை வாரி
யிருமிச்சம் பளத்திலிட்டு ஒத்த வேள்விதன்னில்
நீசமான அக்கினியில் நிமலன் திருவருளால்
நீதியாக குருசன்ஞசி வேள்வியில் வருவதாஞ
வேள்வியில் அரகரா சிவசிவா யென்று
வேத நாதர் உருவது வளர்ர
தாள்வில்லாத தெய்வார் மாமுனியோர்கள்
தவருத(ர)கரா சிவசிவா வென்ம்பார்
பெரிய பண்டாரம் உருவது வளர்ர
பெருஞ்சடைமுடி உருவது வளர
உரு உடன்லெங்கும் உத்திராச்சிய மாலே
யோக வேட்டி உருவது வளர

---

195. கோட்டை > கோட்ட — (பே. வ. மா) — தானிய அளவைப் பெயர்
197. தாவிப்பராம், தாணிப்பராம் என்றும் பாடம்
199. வளைந்து — சுற்றி நின்று.
201. அழல் > அணல் — தீ (பே. வ. மா)
203. மல்லாரி, கொம்பு — இசைக்கருவிக்ள்
205. திருநீற்றை > திருநீத்தை (பே. வ. மா.)
206. எலுமிச்சம்பழம் > யிருமிச்சம்பளம்
210. வளர (வளர்ர — என்றும் எழுதப்பட்டுளது)
215. உத்திராட்சமாலே > உத்திராச்சியமாலே (பே.வ.மா.)
217. தாவடம் — ஆபரணம்

சடைமுடி தாவடம் உருவளர
சன்னாசி யெங்களர் பெரிய பண்டாரம்
திருமேனி வெண்ணீறு துலங்கெ
சிவ குருவான பெரிய பண்டாரம்

கருவுடன் புலித்தோல் உருவது வளர
கஞ்சரக் குடுக்கையும் உரு வளர
முட்டுக் கட்டையும் உருவது வளர
முன்ஞன சுரையோடு உருவது வளர
பாதக் குறடு முருவது வளர

பகவான் நொளி போலே பெரியபண்டாரம்
மாத்திரைக் கோலும் உருவது வளர
மளு வாளாயிதம் உருவது வளர
திரு நீத்துக் கப்பரை உருவது வளர
நீரு புரமானது உருவது வளர

புலித் தோலாசனம் உருவது வளர
பொன்னினொளி போலவே பெரிய பண்டாரம்
விரைவுடன் தெய்வார் குரவைகள் பாட
வேத முனிவர்கள் பூமாரிகள் சொரிய
பொன்னம் பலர் பூமலர் பொற்ப்பகமல(ர்)கள்

பூமாரி தூவித் தொழுது நிற்ப்பராம்
வல்லவராகிய பெரிய பண்டாரம்
மரமலை போலே உருவது வளர

---

218. யெங்களர்—எங்களுக்கு உரிமையானவர்
219. துலங்க > துலங்கெ (பே. வ. மா.)
225. பாதக்குறடு—பாதவணி
226. பகவான்நொளி—பகவானொளி, ன> ந வாகத் திரிந்தது.
226. பகவான்—இறைவன்

தமிழில் றகர ஒற்றை அடுத்து பிற மெய்கள் இரட்டித்து வாரா. ஆனல் இந்நூலில் பல இடங்களில் றகர ஒற்றை அடுத்து பிற மெய்கள் இரட்டித்து வந்துள்ளன.

235. பொற்ப்பக மலர்கள்
236. நிற்ப்பராம்
238. மரமலை போலே – மரத்தால் செய்யப்பட்ட மலை போன்று

சடையுடன் த(ா)வட மாலைகள் துலங்க
சன்னாசி யெங்கள் பெரிய பண்டாரம்

கரு உருவேள்வியில் உருவது வளர
கன்னியர் கூடி குரவைகள் பாட
பரிவுடன் சடைமுடி மீதுலங்க
பரமகுரு வெண்ணீறு துலங்க
நல்லதோர் வேள்வியி தன்னில்ப் பிறந்து

நாட்டிலுள்ளோரை காத்தாசானே
வல்லவராகிய பெரிய பண்டாரம்
வன்மையுடனே வேள்வியில் பிறந்தநேர(ம்)
பக்கப் பழுத்த வாராய் பண்டார கோலமுமாய்
தக்க பண்டாரத்துக்கு உடலெங்கும் தாவட மாலைகளாம்

பிறப்பும் இறப்புமில்லார் நல்ல பெரிய பண்டாரத்துக்கும்
உற்பரில்லாத் தாவடமாம் தோளில் போட்ட
பொக்கணமாம்
புலித்தோல் திருபுரம்பாம் நல்ல பொன்னால்
சுரை ஓடாம்
சலிப்பில்லா பண்டாரம் தலையில் சடைமுடி உண்டாட
காலில் பாதாகுறடும் யயாவுக்கு கய்யில் மழுவாமும்

மேலெங்கும் வெண்ணீறும் முட்டுக்கச்சை மேலே
புலித்தோலாம்
அரிகுரு பண்டாரம் அஞ்சபூத்தில்ப் பிறந்தாரம்
பெரிய கக்கிடும் மாத்திரைக்கோல் அய்யா கய்யில்
பொன்னு மழுவாளாம்
யோக வேட்டியிறுக்கி யிடையி உடுத்த புலித்தோலும்

---

239. துலங்க — தோன்ற
245. வேள்வி > வேள்வியி (பே. வ. மா.)
246. ஆசானே — தலைவனே
249. பக்க—நன்றாக
252. பொட்டலம்> பொட்டணம்> பொக்கணம்
254. சலிப்பு — தளர்ச்சி (பே.வ மா.)
255. பாதகுறடு > பாதாகுறடு (பே. வ. மா.)
அய்யா > யயா (பே. வ. மா.)
258. கக்கிடும்—கக்கத்திலிடும், கக்கத்தை — கம்பு கூடு என்றும் வழங்குவர்.

பாதமா பண்டாரம் வேள்வியில் பய்ய நடப்பாராம்
காவிவேட்டி துலங்க கயிதனில் கப்பரை தானிய(ல)ங்க
மாசில்லா பண்டாரம் மான்மருவாரும்ந்தரு புரம்மாம்
அக்கினி வேள்விதன்னில் அரிகுரு பண்டாரம்
மெய்க்கு மெய்யாக நின்றேன் சடைமுடி
மேலெங்கும் வெண்ணீறும்
சன்னாசி அய்யாவுக்கு தாவட மாலைகாளம்
வன்னத் திருக்கழுத்தில் உத்திராச்சய மாலைகள்
புரண்டாட
எட்டழுத்திலடங்கான் யேகந்த பண்டாரம்
திண்ணமாய் வேள்விதன்னில் திடமுடன்
பிரந்தாரன்றே
திண்ணமுடன்ந்த வேள்விக் கரையில் சிவகுரு
பண்டாரம்
திடமுடன் வேள்வியை விட்டு க்கரையி சொல்லு
மன்னேரமதில்
எண்ணத் துலையாத தேவர் முனிவர் யிருவித
போதனரும்
எங்குமங்கும் பூம் மாரித்தூவி
க்குரவை யிரயுங் கடலொலி போடல்
ஆதிருவே அரகரா வென்று
அடி தொழுது தெய்வார்கள்
அல்லோருங் கூடிச்சிவா
வென்ற வராணந்தம (ா) யாடுவராம்
வல்லவரான பெரிய பண்டாரம்
வருசை யுடனிருக்க

---

260. பைய > பய்ய (பே. வ, மா.)
261. காவி—காவி நிறம், வுக > கயி (பே.வ.மா)
267. யேகந்த—பெரிய
268. திண்ணமாய்—திட்டமாய்
270 கரை > கரையி (பே.வ.மா)
271. தொலையாத > துலையாத—அளவில்லாத
273. இரையும் > யிரயும் (பே.வ.மா)

வாகுடனே பச்சைப் பல்லாக்கு காலாளும் வருத்திட வேணுமென்று
நல்லதொரு வேள்வியைப் பாற்க்கச் சிவகுரு நாதனருள்ம்படியே
நாட்டமுடன் பச்சப் பல்லாக்கு காலாளும் நாடப் பிறந்திடுமாம்
எத்திசை மெங்க்குமே குருதவசி அய்யா ஏத்ததோர் வேள்விதன்னிலே
ஏகாந்த பாதகுறடிட்டு வேள்வி எரிந்தோர்ரக்கினியில்
தந்திரமாக நடந்து கரையிலே தானே சொல்லும் வேளையில்
சங்கு வலம்புரி சேகண்டி கொம்பு சகலதுந் தாள் முளங்க
சன்னுசி யெங்கள் பெரிய பண்டாரம் தணல் வேள்வி தனை விட்டு
எங்கும் நிறைந்தவர்க்கினி காத்தவரெந்த பண்டாரம்
யிறப்பும் பிறப்புமில்லார் யேகச்சன்னுசி எழுத்திலு மடங்கார்
பெசுங்குஞ் சடைமுடி ஆண்டிசிவகுரு பேர் பெரிய பண்டாரம்
போத்தும் உலகெங்கும்ங் காத்தவரெங்கள் பெரிய குருதவசி
அன்ம்புடன் வேள்வியை விட்டுச் சிவகுரு அய்யா கரையில்வர
ஆதரவாய்த் தெய்வார் பூமாரிதூவி அடிதொழுது ஏதவர்செய்வார்

---

276. எல்லோரும் > அல்லோரும் (பே,வ.மா)
திராவிட மொழிகளில் அ > எ மாற்றம் உண்டு. என் பதனேடு நோக்கத்தக்கது.
277. ஆனந்தம் > ஆணந்தம் (பே.வ.மா)
279. வரிசை > வருசை (பே.வ.மா)
280. வாகுடனே—முறையுடனே (சிறப்புடனே)
281. பார்க்க > பாற்க்க (பே.வ.மா)
282. பச்சை > பச்ச (பே.வ.மா)
285. செல்லும் > சொல்லும் (பே. வ. மா)
286. சகலதும் — எல்லாம்
287. தழல் > தணல் (பே. வ. மா)
291. போற்றும் > போத்தும் (பே. வ. மா)

இன்ம்பமுடன் வர பச்சை பல்லாக்கிலே யேறி வளிநடக்க
இரங்கவே பல்லாக்கேறி துலங்கவே பவனிவந்தார்
பவனி வருகிறாரே குருதவசி அய்யா பவனி வருகிறாரே
பவனி வரவே தெய்வார் பாடி யாடிவர
பண்டாரகுருதவசி பச்சை பல்லாக் கேறி
புவன மாமுனிவர் போத்தித் தொழுதுவர
புகழும் பெரிய குருதவசி அய்யா வாறார் பவனி
பாசை பதினெட்டுப் பாசை பறைவார்
பண்டாரம் பெரியபண்டாரம் தவசி
தேசம் புகழு மலை காடு நடந்து மெள்ள
சேருங் கயிலையில் மேவும் ஆரபாரததோடே பவனி
சேங்கண்டி வலம்புரி திருச்சங்கு ஒலமிட
சேரத் தம்பட்டங்கள் ஆரபாரத்தோடே
வரவென்றணி நெருங்க வன்னஞ் சிறந்திலங்க
வரிசை பெரிய குருதவசி அய்யா வாறார் பவனி
காக்காச்சி மலை விட்டு கடந்து சருகுமலை
கனலாய் வேள்விக்கரை கழுவன் பாறை விட்டு
வாக்காய் நடந்து வட கபால மலையில்ச் சென்று
வன்னக் குரு பண்டாரம் வருசையுடன் வாறார் பவனி
ஒட்டியாணம் யோக வேட்டி மாத்திரைக்கோல்

---

294. வழி > வளி (பே. வ. மா)
295. துலங்கவே—தோன்றும்படி
296. பவனி—ஊர்வலம்
அன்பு என்பது அன்ம்பு என்றும் இன்பம் என்பது இன்ம்பம் என்றும் காணப்படுவது திரிபுகளாம்.
301. பறைவார்—பேசுவார் (மலையாள வழக்கு)
304. ஆரவாரம் > ஆரபாரம் (பே. வ. மா)
305. சேங்கண்டி—இசைக்கருவி (மணி), சேகண்டி என்றும் வழங்குவர்
308. வருகின்றார், வருகிறார் என்ற இலக்கிய வழக்கு வாறார் என குமரி மாவட்டத்தில் வழங்கப்படுகிறது.
311. வாக்காய்—வசதியாய்
313. ஒட்டியாணம்—இடையில் அணியும் ஆபரணம்

உத்திராச்சம் நெத்திப் பிறையுஞ் சடை அலங்க
வட்டக் கப்பறையும் வன்னத் திரிகுரு புரம்பும்
வாய்த்த குருதவசி அய்யா பவனி வாருர் பவனி
சடை முடியும்ஞ் செம்பு தாவடமுந் துலங்க
சாத்தும் புலித்தோல் முட்டுக்கெட்டி பொட்டியாணம்
இடையில் காசி வேட்டி யிறுக்கி உத்திராச்சம்
இலங்கும் குரு பண்டாரம் ந்துலங்கெப் பவனி வாருர் பவனி
பச்சைப் பல்லாக்கேறி யேச்சக் கிளவனைப் போல
உச்சை மலைவிட்டு ஒழுங்காய் வளி நடந்து
உடையவன் கயிலை தன்னில் திடமுடன் சென்ருர்
சீர்வளருங் கயிலாச ஞதனுகி சிறந்த குரு பண்டாரனு
சிறந்த கூற்ப் பார்தனிற் செந்தமிளைப் பாடச் சொன்னேன்
பண்ம்புடனே இளைய பெருமா நின்ற யேர் வளருமம் மந்திர
புவனி தன்னில் யினிதாகச் சொன்னபடி நானும் நன்ஞர்
தார்புனைஞ் சிவஞானக் குருக்கள் மீதில் சாத்தினேன்
ஆனந்த களிப்புத்தானே -க-செப்பமுடனே ஆனந்த களிப்பதாக
சிவகயிலை வளமாகச் செளிக்க நாழும் ஒப்பமுடன் திருநடன
தாண்டவங்கள் உருந்து மணமகிள்ந்து தினம்
உரைக்கலுத்தேன் அரவணியுஞ் சிவகாமி தாயைப் போத்தி
அளகான பாற்பதியைத் துணையாகக் 'கொண்டு பேர்ப்

---

314. நெற்றி > நெத்தி (பே. வ. மா) அலங்க—அடைய
319. காசி வேட்டி—காவி வேட்டி என்னும் பாடம்
321. யேச்ச—திறமையான
322. உச்சி என்பது உச்சை என மாறியது முள்ளடியில் உள்ள பச்சை என்பதின் தாக்கமாகலாம்.
324. நாதன் > ஞதன் (பே. வ. மா)
325. தமிழ் > தமிள் (பே. வ. மா)
326. பண்பு > பண்ம்பு, இங்கு பகரத்தின் இன மெல்லெழுத்து மிகுந்தது!
332. உற்றேன் > உத்தேன் (பே. வ மா)

பொழுதும்ங் களித்தீ சர்தானும் யினக்கு உயிர்த் துணையாக
யிருக்கின்ருரே-உ- சங்கை பெறு தொள்ளாயிரத்து
நாற்பத்தி நாலாம் மாண்டு தயவு பெறு மானிலத்தில்
யிருபத் தொன்றில் யெங்குமதி செயமான மாந்தை வராம்
இன்பமுறு ரோகனியாம் திறியேதேசி கங்கை தும்பை
அரவணிந்த பண்டாரத்தின் காவியத்தை யானுலகில் சிறிது
சொன்னேன் பொங்கு புகளதி தீர பூவனஞ் சொனன
புதுமையினுல் குறைகளில்லை புவியில்த்தானே.
சரசுபதிய் முக்காலும் முனிக்க சிவ
தானதன தந்தானன தந்தானன தந்தனன்தனன
சீர்பெறு கயிலை மலையாண்டி
திறமுடன் பெரிய பண்டாரத்தின் பெயரில்
யேர் பெறு தமிள் மாலைப்பாட
ஆனைமுகப் பிள்ளையானவர் காற்ப்பாமாக
யெங்கள் பெரிய பண்டாரம்
லாடர் குருக்கள் தவசி சன்னசி
போங்கமுடன் மனது மெயிக்க
போத்துவேன் செந்தமிள்பாடி என்னுழும்
தண்டமிள்க் கயிலாசநாதன்
தாயுந் தகப்பனு மில்லாத சுவாமி
அண்டமும் பிண்டமு மில்லான்
அளகானே பெரிய பண்டார மெவற்கும்
யிறப்பும் பிறப்பு மில்லாதான்
யேகமாய் நின்ற பெரிய பண்டாரம்
மறப்பும் நினைப்பு மில்லாதான்

---

334. எனக்கு > யினக்கு (பே. வ. மா)
335. சங்கை—புகழ், வெற்றி
338. திரியோதசி > திறியோதசி (பே. வ. மா)
345. யேர் பெறு—சிறப்புபெறு
346. ஆனைமுகப் பிள்ளை—காப்பாமாக > காற்ப்பமாக
349. போங்கம்—மகிழ்ச்சி
350. போற்றுவேன் > போத்துவேன் (பே. வ. மா.)
356. யேகமாய்—எங்கும்

மாறி நின்ருடி ஒருகால் தூக்கும் ஆண்டி
பொன்னின் கயிலாச நாதன்
போங்கா வரம் புனைந்த சங்கர ஞதன்
மின்னே ஒருபாகம் செய்தோன்
வெள் ளெருதின் மேலேறிக் கொண்டாண்டி
வெள்ளிக் கயிலாச நாதன் விரித்த சடையும்
புலித்தோல் உடையும்
புள்ளிமான் பூசாணம் பூண்டுபொன்னிகயிலாசம் சுத்திவந்தாண்டி
பாற்வோனைப்புகழும் பண்டாரம் பண்மரம தனக்குப் பெரியபண்டாரம்
பேரில் பெரிய சன்ஞசி பேரும்ஊருமில்லாத லாடதவசி
குருக்கள் தனக்கும் குருக்கள்
குணமாக சிரித்து விளையாடு(ம்)வாண்டி
மருக்க மகிழுஞ் சிவகாமி
மங்கைதனை ஒரு பங்கில் வைத்தாண்டி
பாற்பதியைப் பங்கில் வைய்த்து
பச்சக் குறத்திக்கு மா(ம)னு மாஞர்
சீராட் சிறுதண்டனே பெத்த
சீராளனைக் கறியாக்கி உண்டாண்டி
நம் தகுருக்கள் உடனே
நாராயண மூற்த்தியான பெருமாள்
விந்தையுடனே சலுவைக் காறன்
மெய்யான பெரிய பண்டாரம் வாருர்
பூமி தனைக்கும் நடுவே
போத மலைகள் மேடுக் குண்டும்
நாமிதைச் சற்று மறியோம்
நலமான பெரிய பண்டாரம் வாருரே

358. மாறி நின்ருடி—காலை மாற்றி ஆடி
361. மின்—பெண்
372. வைத்து > வைய்த்து (பே. வ. மா.)
373. பட்டக்குறத்தி—வள்ளி
374. சிறுத்தொண்டன் > சிறுத்தண்டன் என மாறி வந்துள்ளது. (நாயன்மார்களுள் ஒருவர்)
377. மூர்த்தி > மூற்த்தி (பே. வ. மா.)
378. சலுகை > சலுவை (பே. வ. மா.)

அஞ் செழுத்திலொரு ஆண்டி
ஆணோடு பெண்ணுமறியாத ஆண்டி

கஞ்சா அவினையுந் தின்று
காட்டாண்டி யொருவெ நாட்டாண்டி யானார்
பள்ளிக்கு யிருந்து மறியார்
பாசை பதினெட்டு பாசை யறிவார்
தெள்ளிய ரென மறிவார்

தேசமது வெங்கும் நாதனாய் யிருப்பான்
சந்தி(ர)னை முடிமீதில் தானேதரித்தொரு மானையுமேந்தி
அய்ந்து கரத்தானைப் பெத்தோன்
அறிவுடைய பெரிய பண்டாரசுவாமி வாருரே
சாத்திரஞ் சோதிரஞ் சொல்வார்

தமிழுங் கிரந்தமும் தானே படிப்பார்
சூத்திரக் காறன் பண்டாரம்
சோதில்லை யென்று யிரக்க லுத்தாரே
ஆனை கரடி புலியை
அளைத்து அதின் மேலே யேறியே கொள்வான்

ஞான குருக்க ளவர் தான்
நலமான பெரிய பண்டாரம் வாருரே
கண்டங் கறுத்த பண்டாரம்
கப்பறை பொக்கணமிட்ட பண்டார
தண்டமோடு சூலமுங் கொண்டு

தானோனே சிவகாமியோடே யாடினாரே

---

386. கஞ்சா, அவின்—போதைப் பொருட்கள் அபின் > அவின் (பே. வ. மா.)

388. பள்ளி—கல்விக்கூடம்

392. சந்திரன்—திங்கள், நிலா

393. ஐந்து > அய்ந்து (பே.வ.மா) கரத்தானை > கரத்தான (பே,வ.மா)

395. சாஸ்திரம் > சாத்திரம், சோதிடம் > சோதிரம் (பே.வ.மா)

396. தமிழுங் கிரந்தமும்—தமிழ், கிரந்த வெழுத்துக்களை

399. யானை > ஆனை (பே.வ.மா)

400. அழைத்து அளைத்து (பே.வ.மா) அதன் > அதின் (பே.வ.மா)

403. கண்டம்—கழுத்து

அச்சமில்லாத பண்டாரம்
அன்பத்தோர் சாத்தாதியாய் நின்றேன்
பிச்சை யெடுக்கச் சடையார்
பெரிய பண்டாரத்தைப் போலொருவருண்டோ

தெண்டு கமண்டலம் சூலம்
சீரான கண்ட கோடாரி யெடுத்து
கண்டம்ங் கறுத்த பண்டாரம்
கந்தையுடுத்தவர் விந்தையுடன் வாறாரே

மானும் மழுவையு மேந்தி
மாறியாடி ஒருகாலையுந் தூக்கி
தேனுந் தினைமாவுந் தின்று
சின்ன குருக்களும் அன்றா வாறாரே
எட்டுச் சடையுள்ள ஆண்டி
யேகமாய்ப் பார்த்தாண்டி எங்கும் நின்றாண்டி

முட்டிப் புகழுந்து திரிவான்
மூணு கண்ணு யுள்ள பெரிய பண்டாரம்
அப்பணிஞ்ச் சடையாண்டி
ஆறு முகவனப் பெத்த குருநாதன்
சப்பாணி யாண்டி யாண்டியும் வரவே

தாவட மாலை கழுத்திலிட்டாண்டி
பொன்றாலே பூணுலுமிட்டார்
பூண்டா ரொரு பாம்பை யாண்டி ஆபர்ணம்
அன்ன நடை சிவகாமி
அம்மையவள் காண ஆடலுற்றாரே

---

408. ஐம்பத்தோர் > அன்பத்தோர் (பே.வ.மா)
409. சடையார் > சோர்வடைய மாட்டார்.
412. சீரான—அளவான, கோடாரி—மரம் வெட்டும் கருவி.
418. அன்றா—அங்கு. அன்றா என்பது குமரி மாவட்ட வழக்கு. அன்றா என்பது அந்தா என்ற பிற இடங்களில் வழங்கப்படும்.
421. புகழ்ந்து என்பது புகழுந்து என திரிந்து வந்துள்ளது.
422. மூன்று > மூணு (பே.வ.மா)
424. ஆறுமுகவனை > ஆறுமுகவன (பே.வமா)
428. பூண்டார் — அணிந்தார்

வாசமுடன் கயிலாசம்
மாமலை மீதிலிருக்கு பண்டாரம்
காணக் காச்சிகள் காட்டி
கயிலை மலைதன்னை சுத்தி வந்தாரே
தண்டை வீரதண்டை கொஞ்ச

தங்க சரப்பளி முங்கை வளையிட்டு
அண்டர்கள் போற்று பண்டாரம்
அன்பாய்க் கயிலையில் ஆனந்தக் கூத்தான்
வேலைக் கரத்தில் தரித்து
வெள்ளை யெருதில் விரையெவே யேறி

ஞான மிகுந்த பண்டாரம்
நன்றாய் பவனி வருகிறார் தோளி
தம்பட்டம் பேரிகை கெ(ா)ட்ட
தாரை கிடுபிடி தானு முளங்க
வம்பிட்ட வேல்விளி மாதர்

வரிசையுடனே குரவைபாடி முளங்க
பேரிகை சின்னம் விராணம்
பிந்தாரை நாகசரங் கருங்கொம்பு
வீர வெண்ஞ் சாமரை வீச
மெய்யான குருதவசி அய்யா வாறார்ரே

அஞ்(ெ)சழுத்தாய் நின்ற சோதி
அன்பந்தோ ரச்சத்தாதியாய் நின்றேன்
மிஞ்சிக் கயிலாச மீதில்
விரவுடன் வீதியில் வருகிறார் தோளி
முப்பத்து முக்கோடி தேவர்

முனிவர் கிண நாதர் காண முப்பது லெக்ஷம்
செம்புக் கயிலாச மீதில்
சிவஞான குருக்கள் சேவித்து வாறார்ரே

---

433. காட்சி > காச்சி (பே.வ.மா)
434. சுற்றி > சுத்தி (பே.வ.மா)
435. தண்டை—காலணி
436. முன்கை > முங்கை (பே.வ.மா)
442. தோழி > தோளி (பே.வ.மா)
443-444. தம்பட்டம், பேரிகை, தாரை, கிடுபிடி என்பன இசைக்கருவிகள்.

மாலும் அயனுந் தொளவே
வனமான நாராயணப் பெருமாழும்

தீரன் சலுகைக் காறனும்
திறமாகச் சேவித்து முறையா வரவே
வன்னஞ் சிறந்த பல்லாக்கும்[ம்]
வளமாகியே தங்கப் பல்லாக்கிலேறி
கன்னி சிவகாமியோடே

கயிலை மலை மீதில்ப் பவனி வாரூர்ரே
பாற்பதி யம்மை யுடனே
பாரில்ப் பெரும(ா)ழும் நாராயணரும்
காராளன் நந்திக் குருக்கள்
கணங் காணா பண்டாரமிங்கு வந்தாரே

சடையு முடியும் நடையும்
தாவடம் பூணு நூலு தானுமிலங்க
விடையதி லேறும் பண்டாரம்
வெள்ளிக் கயில மலைமீதில் வந்தாரே
அஞ் செழுத் தெட்டெழுத் தானோன்

ஆண்டி தனக்கு பெரியவன் ஆண்டி
மிஞ்சிப் பல்லாக்கில் லேறி
வித்தாரமாக பவனி வந்தாரே
வந்த பவனியைக் கண்டு
மாமுனி யோர் கழுந் தேவருங் கூடி

சிந்தை மகிள்ந்து தொழுவார்
சிவ சிவா பெரிய பண்டாரம் வாருரே

---

450. வாரூர்ரே, ரகர ஒற்று மிகுந்துளது.
452. நின்ற்ரேன், றகர ஒற்று மிகுந்துளது.
459. தொழவே > தொளவே (பே. வ. மா.)
463. வன்னம்—அழகு
464. வளம்—பல்வகைப் பொருட்கள் நிறைந்த
470. கணம்—கூட்டம்
472. பூணூல் என்பது பூணு நூல் எனப் பிரித்தெழுதப் பட்டுள்ளது.
478. வித்தாரம்—வசதி, விரிவு
480. முனியோர்களும் என்பது முனியோர்கழும் எனத் திரிந்து வந்தது.

மேட்டிக் காறனிந்த ஆண்டி
வெள்ளி மலையிருக்கும் பண்டாரம்
வேட்டியுடன் காசி வேட்டியும்
விரவாய் உடுத்தவர் வீதியில் வந்தார்
சுட்ட சுடுகாட்டுச் சாம்பல்
சுகமாகப் பூசியே சோறுமுண்ணாமல்
நாட்டமாய் கஞ்சா குடித்து
நல்ல அவினையும்ந்தின்று கொண்ட(ா)ண்டி
பத்தியுட(ன்) பாடி யாடி
பட்டண வாசல்கள் சுத்தியே பாற்க்க
சித்தாண்டி நந்திக் குருக்கள்
சிவகுரு பெரிய பண்டாரம் வந்தாரே
ஊர் தோறுஞ் சென்று யிரந்து
ஓட்டிலே பிச்சை யெடுத்த பண்டாரம்
போரல்ப் பெரிய வனானவர்
பெரிய பண்டாரம் பவனி வந்தாரே
முருகனைப் பெற்ற குருக்கள்
முந்த வினா(ய)கன்றனையும் பெற்றோன்
கருவினில் வாராக் குருக்கள்
கந்தை யுடுத்தவர் விந்தையுடன் வாறார்
சட்டை தலப்பாவுங் கெட்டி
சப்பாணிக் கூத்தாடி ஒப்பாய் நடந்து
சுட்ட சுடலையில்லாடும்
சோதி பரனை பெரிய பண்டாரம்
ஆறு சடையினில் வய்த்தோன்
அம்புலி தும்பை யரவம் புனைந்தோன்

---

491. பக்தி > பத்தி (பே.வ.மா)
496. ஓடு—திருவோடு
497. போரல்ப், இது பேரில்ப் என்றும் இருக்கலாம்
483. சட்டை—ஆடவர் அணியும் மேலுடலாடை
483. தலைப்பாகை > தலப்பா (பே.வ.மா),முண்டாசு—தலைக்கட்டு.
505. சுடலை—சுடுகாடு
507. ஆறு—கங்கையாறு
508. அம்புலி—திங்கள்

சீறுமிசமனைக் கொன்றேன்
தேடிக் கயிலாச மீதில் வந்தாரே

பூலோக மெங்குந் திரிந்து
பொருந்தவே நல்லத் தீற்த்தங்களாடி
மேலோ(க) மானதில் வந்தார்
விரித்த சடையான் பண்டாரம்
தானுஞ் சலுவைக் காறனும்

தக்கா பெருமாழும் நாராயணரும்
சிங்கமெனு நந்தி தேவர்
சேவிக்க வாருரே பெரிய பண்டாரம்
யெண்ணத் துலையாத சூச்சம்
யிருந்தாரைப் போலவே மாயகள் செய்வார்

பெண்ணைச் சடையிலே வைப்பார்
பெரியாண்டி சூச்சத்தைக் கண்டாயோ தோளி
அந்த கயிலாச மீதில்
ஆண்டிருந்த தேவருங் கண்டு தொளவே
கந்தெனப் பெத்த குருக்கள்

கயிலாசந் தன்னைக் கண்ட(ா)யோ தோளி
மாயங் கொண்ட மலை மீதில்
வைய்த்தா ரொரு காலைப் பய்யவே தூக்கி
மெய்யாகப் ப(ா)தாள மீதில்
மிதித் தொர்ரு காலை வேடிக்கையாக

சோளியலும்ஞ் சுரையோடும்
சுங்கான் குடுக்கையுந் துய்ய புரம்பும்

---

509. எமன் > இசமன் (பே.வ.மா)
516. தக்க > தக்கா பெருமாள் > பெருமாழ் (பே.வ.மா)
518. சேவிக்க—வழிபட
519. தொலையாத > துலையாத (பே.வ.மா)
524. தொழ > தொள (பே,வ.மா)
525. கந்தனை > கந்தனெ, பெற்ற > பெத்த (பே.வ.மா)
531. சோளியல்—பிச்சைக்காரர் பை,
532. துய்ய—மென்மையான.

O-, 8, K
N76

பாணிதமாக யெடுத்து
பண்டாரமிங்கே வரக் கண்டாயோ தோளி
போக்கன் சித்தாண்டி யிங்கே வந்தாரே

போர்ப் பெரிய பண்டாரத்தைப் போலே
கங்கள வேசமுடனே
கந்தை உடுத்தவரக் கண்டாயோ தோளி
கோமான் ஆண்டிகள் போலே
குருக்கள் ளென்று ஓதி

சாமத்தில் பிச்சைக்கு வந்தார்
சடையாண்டி யிங்க வரக் கண்டாயோ தோளி
சிவ தலமெங்கும் திரிந்து
தீர்த்தங்களாடித் தவசுகள் பண்ணி
பாவமது தீர்க்கும் பண்டாரம்

பாடியிங்கு வரக்கண்டாயோ தோளி
ராம சுரம் பாவ நாயகம்
நல்ல தோர் காசிக் குமரியில் தீர்த்தம்
மாமாங்* கொண்டாடி
யெங்களய்யா யிங்கே வரக்கண்டாயோ தோளி

சிவகுரு நாதன்ம் பண்டாரம்
செஞ்சடையாண்டி திரிபுரம் சுட்டோன்
பாவம்மது தீர்க்கு(ம்) பண்டாரம்
பாடி வரக் கண்டாயோ தோளி
பிச்சை யெடுக்க வென்ற தான்

பேசாமலானந்தக் குருமும் வந்தார்
யிச்சையுடன் ரண்டு பெண்ங்கள்

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 107533
EGMORE, MADRAS

---

535. போக்கன்—பரதேசி, சித்தாண்டி—சின்ன ஆண்டி.
537. கங்கள வேசம்—சிவன் வேசம்
538. உடுத்தவரை > உடுத்தவர (பே. வ. மா.)
542 இங்கு > இங்க (பே. வ. மா.)
544. தவசு—தவம்
547. ரமேஸ்வரம் > ராமசுரம் (பே. வ. மா.)
*மாமரம் என்றும் பாடம்
656. குருவும் என்பது குருமும் என வந்துளது.
557. யிச்சை—விருப்பம், இரண்டு > ரண்டு (பே.வ.மா.)

யிப்போது கூடவரக் கண்டாயோ தோளி
நாராயண மூற்த்தியோடே
நாழும் பெருமாள் சலுவைக் காறனும்

பூராய் பண்டாரத்தோடே
பிச்சைக்கு வந்தாரைக் கண்டாயோ தோளி
நாலஞ்சி நாளாய்ப் பண்டாரம்
நாட்டில் லிரக்கத் துணிந்தவர் போனூர்
காலம் சிறிது மறிந்து

கால் மாறியாடின பண்டாரந் தோளி
குகைக்கு தவசி யிருப்பார்
கூடியே அஞ்சாறு பண்டாரங் கழுமுண்டு
வகைக்கு மறை நாலு காக்க
வைய்யக மீதில்க் கொண்டு வந்தாரே

பூங்கா வனத்தில் வந்தார்
பொய்கையும் ஆத்தன் கரைகழும் உண்டும்
பாங்காய் பலர்ப் பரர்ரேத்தி
பட்டணஞ் சுத்திய் பகலில் வந்தாரே
வந்தாரே சோலை வனத்தில்

வளமையுடன் மேட்டை வெட்டித்திருத்தி
நந்தா வனமும் பயிர்ரேத்தி
நாழும் பெரிய சுவாமி வந்தாரே
தோட்டப் பயிர்கழும் மிட்டு
சுத்திவர வேலி கட்டியே நன்ருய்

ஆண்டிக்கு அஞ்சு பூ பூக்க
அஞ்சாறு நந்தா வனத்யையும் வய்த்தார்
நந்தா வனங்கழும் வைத்து

---

561 பூராய் – முழுவதும், எப்பொழுதும்
563. நாலைந்து > நாலஞ்சி (பே. வ. மா)
568. ஐந்தாறு> அஞ்சாறு (பே.வ.மா)
572. ஆற்றன்கரை> ஆத்தன்கரை (பே.வ.மா)
574. சுற்றி> சுத்தி (பே.வ.மா)
576. மேட்டை—உயரமான இடத்தை

நாட்டமுடன் தண்ணீருட்டி வளக்க
முந்தகஞ் சிவனுர் கிட்டே

முழு மே தோண்டிக் குடங்கள் வெட்டினுர்
அந்த குடத்தை யெடுத்து
அப்போது தண்ணீரைக் கோறியிடவே
பந்தம் பளங் குடத்தைத் தானும்
பாரில் விழுந்து உடைந்துதே அப்பா

அப்போது உடைந்த குடத்தை
ஆண்டவர் தனக்கென்று வேண்டி வரவே
யொப்பில்லாத குசவன்
ஓடியே தெந்த தேமென்றுடலுற்ருரே
பாரும் விசிம்பு மறிய

பத்தியுடன் பயிரேத்தும் தோட்டம்
ஆருமறியாத தோட்டம்
அஞ்சாறு பங்காய் பயிரேத்தினுர்
மூலேகோன் ஆடு கிடக்க
முருகனு மதை காத்துயிருக்க

மாலே கோன் அஞ்சா டெடுக்க
வைய்த்தாரே நந்தாவனப் பயிரெல்லாம்
வாய்க்கால் வரப்பு பிடித்து
வாலேயும் வயித்து மடைகழும் வயித்து
காய்க்கும் பருபத்திலே தான்

அஞ்சி கள்ளன்வந்து அதைக்கொண்டு போனுன்
ஆண்டியும் பார்ப்பானும்ங் கூடி
அப்போது தானுக்குப் புத்தி சொல்லி
தோண்டிக் குடத்தை யெடுத்து
சும்மா அடித்து உடைத்து விட்டாரே

---

584. வளர்க்க > வளக்க (பே.வ.மா)
588. கோரி > கோறி (பே.வ.மா) — முகர்ந்து
589. பந்தம்—பழமையான
590. விசும் > விசிம்பு (பே.வ.மா) — ஆகாயம்
605- பருவம் > பருபம்
606. ஐந்து > அஞ்சி (பே.வ.மா)

உடைத்(தை)த குடத்தை யெடுத்து
ஒன்பது கோடி சித்தாதிகள் கூடி
அடைத்து அடைத்துப் பாற்க்க
அப்போது பண்டாரம் ஆடிக்கொண்டாரே
தந்தார் பளைய குடத்தை

தண்ணி கொடுக்கவும் மாகாது காணும்
அந்த குசவனார் காலில்
அடித்தாரு உடைத்து தவித்து விட்டாரே
குடமுடைத்தாரென்று கேள்க்க
கூசாமலே சிவகாமியுஞ் சொல்வார்

திட்டமுடனே வந்த பண்டாரம்
சிட்டுக் குருவிக்கு ஒட்டு வயித்தாரே
நந்தா வனத்துக்குள் ஆண்டி
நாலாறு மாசங் குடியிருந்தாண்டி
யிந்த மலைக்கு வந்தாண்டி

பேயாண்டி பண்டார சுவாமி தான்ம்பார்
யிட்ட பயிர்கள் வளர
யெப்போது மெங்கள் பெரிய பண்டாரம்
கட்டாக காவலு வய்த்து
க(ா)க்க அஞ்சுபேர்தன்னை வய்த்தாரே

அஞ்சுபேர் காவிலிருத்தி
அடுத்தாரைப் போலே தொண்ணூத்தாறு பேர்வர
வஞ்சி சிவகாமியோடே
வந்தாரே பிச்சையிடுங்கோ மாதாவே
பெண்டாட்டி பிள்ளையில்லை

---

612. சித்தாதி—சித்தாந்த சமயத்தைச் சார்ந்தவர்கள்
615. பழைய > பளைய (பே. வ. மா)
618. தவித்து—உடைத்து
622. ஒட்டு—கண்ணி (ஏதேனும் ஒட்டிப் பிடிக்கும் பொருள்களை வைத்துச் செய்வது)
624, மாதம் > மாசம் (பே.வ.மா)
629. காவல் > காவலு (பே.வ.மா)

பேரு ஊருமில்ல ஆருமில்லாதான்
கண்டவரெல்லாஞ் சிரிக்க
கையேந்திக் கும்பிட பிச்சைதாருங்கோ அம்மா
கந்தையுடுத்து திரிவான்
கயிதனிலே ஒரு காசி யில்லேதான்

வந்தன் உங்கள் மன தேடி
மடியாமலே பிச்சைகொண்டு வா தாய்
பண்டாரமானது யென்பேர்
பாரில் பெரியசுவாமி யென்பார்
கண்டன்ங் கறுத்தவன் யெ(ன்)பேர்

கய்யாந்தி யானது யென்பேருதாய்
சுத்துக் காறனிந்த ஆண்டி
சும்மா ஒருவரை ஆடவே ஒட்டான்
முத்து நந்தி தேவர்ரேடே
முந்தாளுளந்திக்கு யி(ா)ங்கே வந்தாரே

பிச்சை யி(டை)ட வேணுமானல்
பிள்ளேப் பலங்கள் தருவீரோ நீரும்
யிந்தயுடன் சொல்லு மய்யா
எங்கள் பெரிய பண்டாரமே நீர்தான்
சடையோடு யொட்டியாணம்

தாவடமாலே தலேப்பாவுங் கெட்டி
சட்டித் தலேயுள்ள ஆண்டி
தானே யிங்க வரக்கண்டாயோ தோளி

---

636. இல்லே > இல்ல (பே.வ.மா)
641. வந்தன், என்னும் வினேமுற்று தன்மையிடத்தில் வந்துளது. இவ்வழக்கு இன்றும் குமரி மாவட்டத்தில் உள்ளது.
641. மனே > மன (பே.வ.மா)—வீடு
642. மடியாமல்—சோர்வடையாமல்
646. பேர் > பேரு (பே.வ.மா)
650. அந்தி—மாலே நேரம்
653. யிந்த—விருப்பம்

பிச்சைக்கு வந்த பண்டாரம்
பேசாமப் போனு ரொருவருங் க(ா)ணேும்

பிச்சையுடனிங்(கே) வந்தால்
என்னேடே சொல்லாமல் போவாரோ தோளி
தீரன் சலுகைக் காறனும்
திருமால பெருமாள் சிவகாமியம்மை
வாரமுள்ள நந்தி தேவர்

கூடவந்தார் பெரிய பண்டாரமுந் தோளி
தார்க் கொன்றை மாலையைச் சூட்டி
தையல் சிவகாமி பாற்பதி யோடே
யெந்தப்படி யிங்கே வந்தார்
யிந்தப் பெரிய பண்டார சுவாமிதான்

பத்தருக்கு முத்தி கொடுப்போன்
பாரினில் தக்கனெ தலைய அறுத்தோன்
உத்ததோர் முப்புரம் ந்தன்ன
உடனே சிரித்து யெரித்த பண்டாரம்
சஞ்சீவி மந்தி(ர)ம் மூன்றும்

சடைக்குள்ளே சொக்குப் பொ(டி)யது உண்டும்
கஞ்சா அவின் மருந்துண்டும்
கண்டங் கறுத்த பண்டாரம் வந்தாரே
தேசங் கடல் மலைபூமி
சென்றவர் காணத் தலங்கழுமில்லை

பாசை ஒருக்காலே சொல்வார்
பண்டாரம் மெத்த பெரிய பண்டாரம்

---

660. பேசாமல் > பேசாம (பே.வ.மா)
665. வாரம்—அன்பு, உரிமை
671. பக்தன் > பத்தன் (பே.வ.மா)
672. தக்கனை > தக்கனெ, தலையை > தலைய (பே.வ.மா)
673. தன்னை > தன்ன (பே.வ.மா.)
681. ஒருக்கால்—ஒருமுறை
682. மெத்த—மிக

அஞ்சி கல்லாலே ஒரு கோட்டை
ஆனந்த கோட்டைக்கு ஒன்ம்பது வாசல்
அட்ட கயமு மடங்கழும் உண்டும்

கொஞ்சி யிருக்கும் பண்டாரம்
கூத்தாடிக் கொண்டிங்கே வந்தாரே தோளி
யெப்போது மிங்கே வருவார்
யெல்லோருங் கான திருநீ(த்)தை (த)ருவார்
சப்பாணி கொட்டித் திரிவார்

சாம்பலைப் பூசியே பாம்பைப் பிடிப்பார்
கண்ணப்பன் யெச்சி தனைத்தின்றேன்
காஞ்சுரங் கொட்டை யவினையுந் தின்றேன்
பெண்ணுக்கொரு பங்கை யீய்ந்தோன்
யிட்டுச் சுட்டுத் தின்னும் பேராசையானேன்

சங்கரன் னென்ற பேயாண்டி
தாயுந் தகப்பனு மில்லாதவன்ங் காணும்
யெங்கு மிவரில்லாத(தி)ல்லை
என்றும் கயிலை மலையிலிருப்பான்
யிப்படிக் கொத்த பண்டாரம்

எங்கள் பண்டாரம் பெரிய பண்டாரம்
செப்பமுடனடியாரை
திடமாகக் காற்க்கும் பெரியபண்டாரம் அரிஓமன்ன
மூவாதன மூலாய்நின்ற முக்கண்ணனை மூற்த்திக்குக்
பூவலர்க் கயிலாசத்தில் புகள் பெத்துயிருந்துனுழும்

---

685. அட்ட—ஆழமான, பெரிய
690. சப்பாணி கொட்டி—கை கொட்டி
693. காஞ்சுரங்கொட்டை—காஞ்சுர மரத்தின் விதை
இவ்விதை நஞ்சு நிறைந்தது.
700. யிப்படிக் கொத்த—மேலே கூறியவைகள் அனைத்தும்
பொருந்தி இருக்கின்ற.
703. காக்கும் > காற்க்கும் (பே.வ.மா)
704. மூர்த்தி > மூற்த்தி (பே.வ.மா)

ஆவலாய்ப் பாடியாடி ஆனந்தஞ் சிந்தும்பாடி
தேவர்கள் தொழும் பண்டாரந் திருநடனமாடினுரே
ஆடிக்கொண்டாரே திருநடனமாடிக் கொண்டாரே
ஆடிக்கொண்டாரே பெரிய பண்டாரம்
தேடிய முப்பத்து முக்கோடி தானவர்

சென்று அரகரா வென்று அன்னமிட
ஆயிரங் கவிவாணர் மத்தாளங் கொட்டிட
அய்யா பராக்கு பாராக்கென்று போற்றிட
தாயுந் தகப்பன்னு மில்லாத யேயாண்டி
தண்டை சிலம்பு கலீர்கலீரென்னவே ஆடி

காவிவேட்டியும் யோகவேட்டியு பூண்நூலும்
கந்தையும் பொக்கணந் தோளிலே யிட்டு
பாவினையாக பெரிய பண்டாரம்
பாம்பை யுகந்(து) தாவடமாகவே பூண்டு ஆடி
காதிலிட்ட சிவ முத்திரையாட

கண்ட கோடலியுங் கப்பரையாட
வீதித் தெருவிலே வெட்டா வெளியிலே
விண்ணவர் கூடியே பொன்னம்பலத்தை ஆடி
தொப்பியுமிட்டுத் தலைப்பாவுங் கெட்டி
துய்ய புரம்பையும் கய்யில்ப் பிடித்தவர்

செப்பும்ஞ் சிவகாமி பாற்பதி காணவே
தில்ல வனத்திலே நல்லதலத்திலே ஆடி
மெய்யுடனே சலுவைக் காறன்க் காணவே
மெய்க்கும் பெருமாழும் நாராயண காண
வய்யக மீதிலே பெரிய பண்டாரம்

---

706. ஆவல்—விருப்பம்
710. தானவர் — அசுரர், வித்தியாதரர்
715. தண்டை, சிலம்பு — காலணிகள்
717. பொக்கணம் – சோளியப்பை
718. பாவினை—தியானம், பாசாங்கு
719. தாவடம் — கழுத்தணிமணிமாலை
721. கோடரி > கோடலி (பே.வ.மா)
722. வெட்டாவெளி —திறந்த வெளியிடம்
727. தில்லை > தில்ல (பே.வ.மா)

மாவடி வட்டத்தில் நின்று சந்தோசமாய் ஆடி
மண்ணாட விண்ணாட மண்டலமுமாட
வாயுஞ் சந்திரன் சூ(ரி)யனு ம(ா)ட
யெண்ணு மெழுத்தாட யெல்லா உயிர்ராட
யிப்படி யெங்கள் பெரிய பண்டாரம் ஆடி

ஒட்டியாணம் திறிசூலம் யோக வேட்டி
உண்ணுஞ் சுரையோடும் பொன்னில் குடுக்கையும்
கட்டு முட்டாக யிவராடும் போதிலே
கலியுகமெல்லாம் ஒருப்போலே யாடவே ஆடி
கூண்ட சடையாட கொன்ற மாலையாட

கொக்குற மாடமே மிக கவிகள் பாட
தாண்டவ மாடினாரே எங்கள் பண்டாரமும்
தாரக வனத்திலே தனித்த யிடத்திலே ஆடி
செம்பொன்னிடையாட திங்கள் முடியாட
தீந்திமி கொட்டவே கயிமணி கொட்டவே

அம்பலமான திருவம்பலத்திலே
ஆதியந்தமில்லாத பண்டாரம் ஆடி
சீறுமாம் புலித்தோலையும் பூண்டு
தின்பார் அவினயுங் கஞ்சா பொடியும்
ஆறு சடையைத் தரித்த பண்டாரமும்

அப்பாலும் மெய்ப்பாலும் முப்பரத்தையுங் கண்டுஆடி
முப்பு(ர)த்தை சுட்டு காமனையுஞ் சுட்டு
முன்னமே மாமனையுஞ் சுட்டுப் போட்டார்
செப்பியே மாமனையுப்ஞ் சுட்ட சுடலையில்
தேவாதி தேவன் பெரிய பண்டாரமும்ஆடி

---

736. திரிசூலம் > திறிசூலம் (பே.வ.மா)
738. கட்டுமுட்டு—அமைதி, தேகக்கட்டு
739, ஒருப்போல்—ஒத்த தன்மையுடன்
742. தாண்டவம்—கூத்து
752. காமன் – மன்மதன்
753. மாமன்—சிவனின் மாமனாகிய தக்கன்
755. தேவாதிதேவன் – தேவர்களுக்கெல்லாம் தேவன்

காட்டு நரியைப் பரியாக்கி விட்டவன்
காலனைக் காலாலுதைத்த கரைக்கண்டன்
ஆட்டுக் குளஞ்சாறு யாட்டை யெடுத்தபின்
அம்பமேறி மழுவேந்தி நின்றவன் ஆடி
பாதச் சிலம்புமது பாடி ஆடிஆட

பய்ய அரவம் படம்ந்தன்னை விரித்தது
வாடக் கூதன் சிதள் பாதன்
பாமரர் கோமான் பெரிய பண்டாரசுவாமிஆடி
பாதாக் குறட்டையும் பாதத்திலிட்டு
பய்யவே ஆனந்த சித்தும் படித்தவர்

மதயோகிகள் அய்யா பிராக் கென்று
மாறி நின்றாடும் பெரிய பண்டாரமும்ஆடி
வள்ளிக்கு மாமி சிவகாமி பாற்பதி
மங்கை உமையம்மை ஒரு பங்கிலிருக்கவே
வெள்ளிக் கயிலாசம் மாமலை மீதிலே

வேதனுங் காணாப் பெரிய பண்டாரமும்ஆடி
மாலும் பிரமாவுந் தேடியுங் காணாமல்
மாயாண்டியாகிய பேயாண்டி யானவர்
பாலும் பளமுடன் தேனுந் தினமாவும்
பாங்காக உண்ட பெரிய பண்டாரம்ஆடி

மந்திரத்துக்குள் டாத பண்டாரம்
யிந்த பண்டாரம் பெரிய பண்டாரம்
யெங்கும் நிறைந்து யிருந்த பண்டாரம்ஆடி
மூலி மருந்து ஒருகாலில் நின்றவன்
முத்திக்கு வித்தாய் முளைத்த பண்டாரம்

காலில்ச் சுறுக்காக மேல் வெளிலே
கண்டதார் கேட்டதாரென்று கைகொட்டிய் ஆடி

---

759. மழு—கோடாரி போன்ற ஒன்று
772. அடியும் முடியும் தேடிய செய்தி கூறப்பட்டுள்ளது,
774. பழம் > பளம், தினை > தின (பே.வ.மா)
776. தாத பண்டாரம்—அடிமைக்காரர், கொடையாளர் தாதக்கூத்து என்று ஒருவகைக் கூத்தும் உண்டு.
730. முத்தி—ஞானம்
781. சுறுக்காக—விரைவாக

மாலயனுக்காக ஒரு ஆட்டு ஆடினர்
மன்மதனுக்காய் ஒரு ஆட்டு ஆடினர்
காலனுக்காக ஒரு ஆட்டு ஆடினர்
கறுத்தவர்ராகிய பெரிய பண்டாரம்
மாது உமைக்காக ஒரு ஆட்டு ஆடினர்
மாற்க்கண்டனுக்காக ஒருஆட்டு ஆடினர்
சாதி சனங்கள் சறுவ உயிருக்கும்
தாண்டவ சங்கர மாகநின்ருடினர் ஆடி
ஆறு சடையுள்ள தானுமிருக்கவே
அம்புலியைக் கூட அங்கே தரித்தவர்
ஆறு பெண்ணுண்டு பெரிய பண்டாரத்த
ஆமென்று போமென்று ஓம்மென்று சொல்லி ஆடி
முப்புரஞ் சுட்ட சுடலுயிலாடினர்
முன்னமே தக்கன் சுடலையிலாடினர்
தப்பாமல் வேள்வி மலையிலும் ஆடி
தானே கயிலையில் மலை(யி)லும் ஆடினர்
மாலையனச் சுட்ட சாம்பல்ப் பூசினர்
மாறியாடியொரு காலையுந் தூக்கினர்
சாலக்காறனென்று யெல்லாருஞ் சொல்லவே
தாவட மாலையும் பூணுநூலுமாடவே ஆடி
அப்போது நல்ல சலுவைக் காறனென்று
அய்யா பராக்கு பராக்கென்று கொண்டாட
செப்புஞ் சிவநந்தி தேவருஞ் சேவிக்க
தேஞர் சிவகாமி கண்டு மகிள்ந்திட ஆடி
அஞ்(செ)ச முத்தான திலு மடங்காதவர்
ஆசை யுமிட்டுப் பிறியாத பண்டாரம்

---

783. ஆட்டு — ஆட்டம்
789. சர்வ> சறுவ (பே.வ.மா) — எல்லா
791. ஆறு சடையுள்ள தானும் — ஆருனது சடையினுள்ளே தானும்
792. அம்புலி — திங்கள்
801. ஜாலம்> சாலம் (பே.வ.மா) — வேடம்
808. பிரியாத> பிறியாத(பே.வ.மா)

மஞ்சி கவிழு மலைக்குளிருப்பவர்
மாலயனும் மகிள்ந்து கொண்டாடிடவே ஆடி
வேதன் தலையஞ்சில் லொன்றைப் பிடுங்கியே
மெய்ப்பாய்க் கரத்தில் தரித்து யிரந்துண்ட
நாதன் பெரிய பண்டாரஞ் சன்னுசியாய்
நாச்சி பாற்பதி கண்டு மகிள்ந்திட ஆடி
யெண்ணு யிங்கெண்ணுதார்கள் சேவிக்க
யிந்திரன் ஆனை முகன் கண்டுசேவிக்க
கண்ணன் பெருமாள் சிவசிவாயெனவே
கானகத்தில் வாள்ப் பெரியபண்டாரம் ஆடி
காட்டில் நரிவனுக் குதிரையதாக்கியே
காவலவன் முன்னேயிட்ட பண்டாரமும்
கூட்டமிட்டுக் கொண்டு பாட்டும் படமாக
கோலக் கயிலாச மானதில் நின்று ஆடி
கைய்தனிலே ஓர் காசியில்லாத பண்டாரம்
கடையிருந்துக் கொறித்திடும் பண்டாரம்
பொய்யை ஒருக்காலே சொல்லிய பண்டாரம்
பூசை நமக்கென்று வேசம் மாறிய பண்டாரம் கொண்டு ஆடி
வில்லாலடித்த அடியது பட்டவன்
வேடனுடயெச்சித் தன்னையுந் தின்றவன்
நல்ல சிதம்பரத்தாண்டி பண்டாரமும்
நடத்திலே நின்று வெட்டா வெளி பாற்த்து

---

809. மஞ்சு> மஞ்சி(பே.வ.மா)—மேகம்
813. நாதன் — தலைவன்
814. நாச்சி — தலைவி
819-820. நரியைப் பரியாக்கிய கதை கூறப்பட்டுள்ளது.
823. காசு> காசி (பே.வ.மா) — பொன் அல்லது செம்பால் ஆகிய நாணயம்
824. கொறித்து — ஒவ்வொன்றுகப் பொறுக்கித் தின்று
828. வேடனுட—வேடனுடைய. இவ்வாறு வேடனுடைய என்பது வேடனுட என அமைந்து வந்தது மலையாள மொழித் தாக்கமாக இருக்கலாம். இம் மாதிரி உடமைப் பொருள் உணர்த்தும் உருபன் (உட <உடைய) என அமைந்து வருவதை இந்நூலுள் பிறவிடத்தும் கண்டு கொள்க.

பேச்சை யறியாத லாட தபம் தெளியார்
பிள்ளையறுத்துக் கறி வைத்துண்டவர்
மூச்சை யடக்கியே யோகமிருப்பவர்
முன்னு பின்னு மில்லாமும் மூர்த்தியானவர்
யெங்கும் ஒரு வடிவாக யிருப்பவர்

யேகந்தமான பரப்பிறம மூற்த்தி
செங்கையில் மழுமானையு மேந்தி
திருநட மென்றிந்த தெய்வசபைக்குள்ளே ஆடி
பாணந்தனக்கு விறகு சுமந்து
பசியாத்த மாட்டாமல் பாரிலன(வ)ரும்

காணவே ஆனந்த சிந்தும் பாடிக்கொண்டு
காசினி தன்னிலிரந்து குடித்தவர் ஆடி
சீனிக் கிளங்குடன் தேனும்ந்திணைமாவும்
தின்று பசியாறி நின்ற யேப்பமிட்டு
மானிலந் தன்னில்ப் பெரிய பண்டாரமும்

மங்கை சிவகாமி வல்லி கொண்டியே ஆடி
ஊருமில்லாதவன் பேருமில்லா(த)வர்
ஒன்றுமில்லா(த)வன் கண்டு யள்காய்
வாருஞ் சிதம்பரமானதிலே காளி
அய்யா பெரிய பண்டாரஞ் சன்ஞசிய்யார் ஆடி

வெள்ளிப் புரம்பும் விரித்த சடையுமாய்
வெங்கலங்க் கோமணஞ் செம்பாகவே கட்டி
கள்ள மில்லாமலே பாதா குறட்டையும்
காலிலே யிட்டுக் கலீர் கலீரெனவே ஆடி
வந்த கிளட்டாண்டி மாயஞ் சூச்சக்காறன்

---

831. தவப் > தபம்(பே.வ.மா)
834. எல்லாமும் > இல்லாமும்(பே.வ.மா)
839. பாணன்—பாணபத்திரன் (பாணபத்திரனுக்கு வேண்டி விறகு சுமந்த செய்தி கூறப்பட்டுள்ளது)
840. அனைவரும் > அன(வ)ரும் (பே.வ.மா)
843. சீனிக்கிளங்கு—சர்க்கரை வள்ளிக் கிழங்கு
852. செம்பாகம்—சரிபங்கு
855. சூச்சக்காறன்—விவேகமுள்ளவன்

வல்ல ராண்மை தன்னை யளவிட போகாது
சந்தணமும் பூசி செந்தமிழும் பாடி
சாத்திரமும்ஞ் சொல்லி கோத்திரம் வாளவே ஆடி
கடுங் கலியாணஞ் செய்ய பொருத்தமும்
கன்னிதிரண்ட பலனின் முகிள்த்தமும்

யிட்டமுடன் பிள்ளைப்பெத்த பலன்ங்களும்
எல்லா மறியவோர் பெரிய பண்டாரம் ஆடி
மக்களைப் பெத்தாரும் ரெல்லாரும் பணமென்பார்
மாடுகளினாலே ஓர் பணம் தாவென்பார்
பாக்குச மாகவே களக்கை தாவென்று

பண்டாரம்ங் கேட்டுப் பலநாளும் வேண்டிய் ஆடி
என்று சிவ குருனாதா கொண்டாடயே
இன்பமுடன் நல்ல பாக்கிஷசம் நல்குவாய்
மன்று தனிலேப் பெரிய பண்டாரம்
வண்மையுடனே குடிகொண்டு நன்றாகவே ஆடி

எந்தப் படியாடினார் திருநடனம் எந்தப்படியாடினார்
தித்திமி திந்திமி திம வெனவே
செம்பொன் திருப்பாதஞ் சேரவே கால்த் தூக்கியே
அந்தமும் ஆதியுமில்லாத பண்டாரம்
அண்டரண்டங்கள் நிறைந்து நன்றாகவே எந்த

மாலையான் தேடியுங் காணாத பண்டாரம்
வஞ்சனை சூனியமாக்கிடும் பண்டாரம்

---

856. வல்லர் வல்லமை உடையர்
860. கன்னி திரண்ட—பெண் பருவமடைந்த (பூப்பெய்திய) குமரி மாவட்ட வழக்கில் பூப்பெய்துதலைக் குறிக்க பல சொற்கள் காணப்படுகின்றன. அவை சடங்காதல், பக்குவமாதல், திரளுதல், ருதுவாதல் (ரெதுவாதல்), சமைதல் என்பனவாம். கேலியாக பேசும்போது ''மூலையில் இருத்தல்'' போன்ற சொற்களையும் பயன் படுத்துகின்றனர்.
860. முகூர்த்தம் > முகிள்த்தம் (பே. வ. மா.)
865. பாக்கியம் > பாக்குசம் (பே. வ. மா.)
877. வஞ்சனை > வஞ்சினை (பே. வ. மா)—மந்திரவாத ஏவல்கள்
877. சூனியமாக்கிடும்—அழித்திடும்

காலனைக் காலா லுதைத்திடும் பண்டாரம்
கண்ணி சிவகாமி தென்னுடனின்று எந்த
வாழும் வடமாலை சூடும் பெருமாளும்
வாடாத நாராயண நந்தி தேவரும்
சூழுஞ் சலுகைக் காறனுடனின்றவன்
தோந்தியோ கண்ணுக்கும் வின்னுங் காணாமல் எந்த
வாதாடிக் கொண்டு ஒரு காலையுந் தூக்கியே
மாதுமை பாற்பதி தானு மகிள்ந்திட
காதில் சங்கு வளையாடக் கட்டியே
காவி வேட்டியுடன் யோக வேட்டியாட எந்த
தண்டையுமாட சிலம்பு கலீர்ரெனவே
தாவடம் பூண்ணூல் மார்விலளிந்தவர்
பண்டு முன்னாளுள்ள பண்டாரமாயிது
பாசை ஒருகால்ப் பேசி பேசிக் கொண்டு யெந்த
வந்தான் சலுவைக்காறன் னென்று பேரிட்டு
மாயமுடன் சுருப மாறிக் கொண்டு
சிந்தை மகிள்ந்து பெருமாளுடன்ங் கூடி
தேடினாலுங் காணக் கிட்டாத பண்டாரம் எந்த
யெங்கள் பண்டாரம் பெரிய பண்டாரம்
யெவர்க்கும் பண்டாரம் அவர்க்கும் பண்டாரம்
போங் கமுடனந்த பொன்னம் பலத்திலே
பேத சிவகாமி மாது காணாமல்
யேக பாரமான பிரமன் பண்டாரம்
எளியன் னுடனே உரைக்கும் பண்டாரம்
ஏகமுடனந்த நம்ப படாது
முப்புரத்தைச் சுட்டதீனுக்கு டையவன் எந்த
க[ா]ணக் காச்சி ஒருக்காலே சொல்வார்
கள்ளப் பண்டாரம் பெரிய பண்டாரம்

---

879. சிவகாமி தன்னுடன் > சிவகாமி தென்னுடன் (பே. வ. மா)

883. தோன்றி > தோந்தி (பே. வ. மா)

889. அணிந்தவர் என்பது அளிந்தவர் என தவறாக எழுதப்பட்டுள்ளது.

893. சுருபம்—உருவம்

899. பேதை> பேத(பே.வ.மா)

தாரணிக்குள் யிவர் லாடா பரதேசி
தங்கக் கயிலாச மா ம[ா]லையாண்டி எந்த
ஒன்பது கோடி சித்தாதிகழுண்டு
உலகினில்ச் சன்னாசி பண்டாரங்கழு(ம்) உண்டும்
அன்பதுக் கான பெரிய பண்டாரத்தை

அல்லோருங் கண்டு வணங்கிட எந்த
புல்லை யெருதிலே மேலேறிக் கெ(ா)ண்டவர்
பிச்சையெடுக்க வருகிற போதிலே
தில்லை வனத்தாடே பத்தின மார்கள்
சென்று பண்டாரத்தின் பின்னே துடந்திட எந்த

காற்க்கும் பண்டாரம் சலுகைக் காறனுக்கு
கண்ணான பண்டாரம் மாயக் கயிலாசத்தின்
வாங்கியே நின்று நடத்திய பண்டாரம்
வஞ்ச கஞ்(செ) சனு பொய்யில்லாத பண்டாரம் எந்த
எல்லா உயிர்ச்கும் யிறையவனா நின்றவர்

நீசனெனப் பேர் கொன்ற பண்டாரம்ங்கழும்
தில்லை வனத்திலே நல்ல தலத்திலே
தேவி சிவ(க)ாமி யம்மனுட னின்று—எந்த
கஞ்சாடுகிகள் மிஞ்சித்தான் போச்சுதோ
காஞ்சரங் கொட்டை யவினைய்தி(ன்) றவன்ந்தானே

அஞ்சாமல் பண்டாரப் பஞ்ச்சரம் பாட
அண்டண்ட பிண்டத்துக் கப்பாலே தானின்று
மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை வயித்தவன்
மக்கழு சுத்தமும் மொக்க மறந்தவன்
கண்ணைச் சிமிட்டி ஒருகாலைத் தூக்கியே

---

906. தாரணி—பூமி
911. எல்லோரும் > அல்லோருங் (பே. வ. மா)
912. புல்லை—மங்கலான மஞ்சள் நிறம் அல்லது வெண்மை கலந்த சிவப்பு நிறம்
912. எருது—காளை
915, தொடர்ந்திட > துடந்திட (பே. வ. மா)
916 காக்கும் > காற்க்கும் (பே. வ. மா)
918, வாங்கு > அடி
919. சிறு > செறு (பே. வ. மா)
926. பஞ்சரம் > பஞ்ச்சரம் (பே. வ. மா)—ஒரு பண்

கண்டதார் கேட்டதா ரென்று பண்டாரமும்
முத்துமாலை கொத்துமாலை கொன்றமாலை
முன்னே ஒருபாம்(பு) தன்னையுங் கூடவே
விஷத்தார மாகவே அணிந்துபண்டாரம்
மேலெ வெளியிலே—சூரன் ஒளிக்குனனே

எட்டுச் சடைக்குள்ளே பாம்பு மிருக்கிது
யெண்ணாத நஞ்சி கழுத்திலிருக்கிது
சடை களத்தாத அய்ந்தலை நாகம்
சடைக்குள்ளிருந்து யெட்டிய் யெட்டிய்ப் பாற்க்க எந்த
மக்களி வனுக்கு ரெண்டு மக்க ளென்பார்

மய்த்து உண்ணர் உண்(ெ)டன் பார(ா)ம் மாடாடு
உண்டெ[ா]ன்பார்
யேககால ஆறு பெண்டாட்டியு உண்டென்பார்
யில்லா ஒருதருமில்லாப் பரதேசி எந்த
வீடில்லை ஒடில்லை குடி(லி)ல்லை யென்றவன்
வெட்டா வெளியிலே நாடகமாடுவான்

தேடியே போனதும்... ... ...
தேசம் திரிவானடி மோசம் வராமலே எந்த
கொக்குப் பிடிக்க நரியைப் பிடித்தவன்
கொக்கும் நரியையுங் கூடக் கொண்டு போனுன்
கொக்கு யிவனுக்குத் தக்கும் மென்று சொல்லி

குடலது தன்னிலது தன்னிலே நாடகமாடினுர் எந்த
நந்திக் குருக்கழும் வந்து தொழுதிடவே
நாராயணப் பெருமாழும் தொளிதிட
அந்தத் திருநடனமாடினுர் பண்டாரம்
அன்புடனே சலுகைக் காறனைக் காணவே எந்த

வல்ல வாடாமாலை சூடும் பெருமாள்தான்
மக்கழுஞ் சுத்தமும் ஒக்க தளைத்திட

---

934. விஷ்த்தாரம்—அகலம்
938. சடை களத்தாத—சட்டை அல்லது தோல் களத்தாத
941. மைத்துனர்> மய்த்து உண்ணர் (பே.வ.மா)
944. குடில்—குடிசை
953. தொழுதிட> தொளிதிட (பே.வ.மா)

நல்ல சிவகுருநாதன் கொண்டாடினான்
லாடப் பரதேசியான பண்டாரமும் எந்த
சீர்வளர் கயிலாசனாதன் சிறந்த பெரிய பண்டாரத்தின்
பேரில் யேர்பெறு ஆனந்தச் சிந்துமியுடன்
திருநடன சிந்தும் தார்பெறு தாண்டவச் சிந்தும்
பாடித்திருநடன சுவாமிபேரில் சீர்பெறு பண்டாரசுவாமி
பேரில் சிந்தயுடனே திருக்கும்மி பாடுவோம்மே

கும்மி

வந்தாரே தெச்சணா பூமிதன்னில்
வய்யகமேப் பொதுவனை வென்று
சிந்தை மகிள்ந்திடதெய்வா(ர்)கள் பண்டாரசுவாமியை
தெளிக்க கும்மி யடிப்ப மெடி
வெள்ளிக் கயிலாச மாமலையும்
வேடிக்கையாகிய பொன் மலையும்
கள்ளமில்லா மலே வேள்வி மலையனும்
கண்டதுண்டு மிந்த பண்டாரத்தை
தீர்த்தங்க ளெங்கும் சென்றாடி
தேசங்கள் தோறும் திரிந்தலைந்து
பாத்திரங் கை கொண்டு வந்தார்தவசிய போல
பாடிக் கு(ம்)மி யடிப்ப மெடி
நந்தா வனந்தாண்டி யிந்தாண்டி
நாலஞ்சி தோட்டம் பயிரேத்தி
வந்தார் கருஊரில்க் கோட்டை யிடவென்று
வண்மைய்யா நந்தியுடன் மகிள்ந்து
தேவி சிவகாமி பாற்பதியும்
திட்டமுடன் சலுகைக் காறன்
மேவும் பெருமாளும் நாராயணனுடன்

---

968. அடிப்பம்—தன்மை பன்மை வினைமுற்று
972. கண்டதுஉண்டும் என்பது கண்டதுண்டும் எனப் புணர்ந்து நின்றது
975. தவசியை> தவசிய (பே.வ.மா)
979. கரூர்> கருஊர் (பே.வ.மா)

மெய்க் குருசுவாமியும் வாருர்ரெடி
வாச கருஊரில்க் கோட்டை

வந்தாரே பண்டார சுவாமியவர்
நேசமுடன் மகிள்ந்து சிங்காரமாய்
நினைத்துக் கும்மியடிப்ப மெடி
அஞ்சி கல்லாலே ஒரு கோட்டை வைக்க
ஆன்று ஓம்மென்று கொண்டாடி

நெஞ்சங் கலங்காமல் பண்டார சுவாமியும்
நின்ருரடி முடி ஒன்ருக
நாலாறு துண்டங்கள் து[ா]ண்டங்கள்தான் சேற்த்து
கண்ட துண்டங்கள் கழுத்திலிட்டு
கால் வளையிட்டு யிறுக்கி நன்ருய்

தொண்ணுத்தாறு வரைக் காவல் வைத்து
சுத்தி வாசலுமிட்டு நன்ருய்
யெண்ணமுடனே புலிமுக கொத்தாணம்
மிட்டத்தில் பீராங்கி தானேத்தி
கோட்டையுங் கொத்தாளாள் வாடிகாளம்

கோம்பையுந் தோரண வீதிகழும்
கோட்டையும் வெட்டித் திருத்தி ஒப்பமிட்டு
கய்யாரப் பீராங்கி யேத்தியே நன்ருய்
காயாம்புரி கோட்டை வாடியிட்டு
கம்பமும்ந் தோரணமும் நாட்டி

மாயமுடனுள்க் கோட்டைக்குள்ளே
வந்து புகுந்தாண்டி யிந்தாண்டி
அஞ்சி பூதங்கழுஞ் சேவிக்கவே
ஆனந்த நந்தி தேவர் நாராயணரும்
கொஞ்சி சிவகாமி பாற்பதி தாயாரும்ங்

கூடச் சலுகைக் காறனுடனே
தம் பட்டம் பேரிகை தாமுளங்க

---

998. கொத்தளம்>கொத்தாணம் (பே.வ.மா)—மதிற்புறம்
999. பீராங்கி—பெருவெடிக்குழாய்
1002, ஒப்பமிட்டு—அலங்கரித்து

தானே சிங்காசன மானதிலே
நம்பும் பெரிய பண்டார சுவாமியும்
நாடிய கோட்டைக்கு நாயகனும்

கோட்டைக்கு நாயகன் பண்டாரம்
கொஞ்சும் பரிமீதிலேறிக் கொண்டு
நாட்டை யடக்கி குடி வளத்த
நல்ல பெரிய சுவாமியேடி
வாடயிட்டுக் கோட்டைக் குள்ளாகவே

வாய்த்த படைகளும்ந் தானிருக்க
வேடிக்கைக் காறன் பெரிய பண்டாரத்தின்
விஷ்த்தாரம் பாருங்கோ தோளியரை
அஞ்சு கல்லால் கோட்டைவைப்பாரு உண்டோ
அதின் மேலே கொத்தான் வைப்பார் உண்டோ

மிஞ்சவே காலாண்டு நாட்டிக் கொண்டாரென்று
மின்னே கும்மியடியுமேடி
தாந்தமில்லாத மெஞ்ஞானி
தாயும் தகப்பனு மில்லாதான்
ஆனந்தக் கோட்டைக்கு ஒன்பது வாசல்

அடக்க முடனிட்டுக் கொண்டாண்டி
சுத்திக் கோட்டைக்கு வாசலிட்டு
தொண்ணு(த்)தாறுவரைக் காவல் வைத்து
பாத்துக் கொண்டே கூத்தாடிக் கொண்டார் நல்ல
பண்டார சுவாமியை கும்மியடி

யிப்படிக் கோட்டைகள் தானும் வைத்து
யேகாந்தக் கொத்தாளந் தானும் வைத்து
ஒப்பமுடனே பெரிய சுவாமியும்
ஊர் தோறும் பிச்சை யெடுத்தாரே
தெச்சண பூமியில் வந்தோமே

1024, வைப்பார்> வைப்பாரு (பே.வ,மா)
1026. ஆண்டு — அவ்விடத்து
1028. மெய்ஞ்ஞானி> மெஞ்ஞானி (பே.வ.மா)
1034. பார்த்து> பாத்து (பே.வ.மா)

தேசங்கழும்ங் கண்டோமே
உச்சிதக் கோட்டையு வைத்தோமே
ஊருங் குடியேத்திக் கொண்டோமே
அந்தக் கரு ஊரு 'மண்டாக்கி
செய்ய சிவகாமி பாற்பதியும்

செப்பமுடனே குருக்கள் மாயன்
மாயன் வளர்ந்த யனந்தா புரத்தில்
வந்து வனங்கழும்ங் காணவென்று
மாயமுடன் பெரிய பண்டாரம்மும்
மாயச் சுருபங்கள் கொண்டாடி

பக்கப் பழுத்தக் கிளவனுமாய்
பஞ்சி போலே நரைத்த தலையும்
கக்குக் கென்ன யிருமிக் கொண்டு
கய்யில்த் தடியது தானூன்றி
கஞ்சா தின்ற கிளவனுமாய்

கந்தை உடுத்து அளகாக
மிஞ்சியேத யிடைச் சிலம்பு புலம்பவே
வேடிக்கையாக நடந்தாரேடி
பண்டாரத்தின் பட்டணத்தில் பலபேரறிய
பண்டாரம் நானெனவே நடந்து

திட்டமுடனே யனந்தா புரமதிலே
சென்றார் திருமாலை காணவென்று
சென்று யனந்தா புரந்தனையும்
சீர் போத்தி யென்னாழுங் கண்டருளி
நன்றியுடனே திருக்கோவிலுக்குள்ளே

நல்ல சுவாமியும்ஞ் சென்றனரே
சென்ற திருமலை பெரும(ா)ழும்
தெய்வப் படைகழுந் தா(ெ)னருங்க
நன்றியுடைய பெரிய சுவாமி மன(ம்)
நன்றாக வந்து தொழுத(ா)ரே

1047. அனந்தாபுரம் — திருவனந்தபுரம்
1053 கக்குக்கென்ன — ஒலிக்குறிப்புச் சொல்

தொழுது கும்பிட்டுத் தேவபெண்ங்கள்
சுத்தி வந்து வட்டமிட்டு நன்றாய்
வழுவில்லாதப் பெரிய பண்டாரத்தை
வாள்த்தி கும்மியடிப்பமேடி
கும்மியடிப்பா(ர்) பரிசை படிப்பா(ர்)

குஞ்சரங்கள் வீசிடுவார் கும்பிடுவார்
நம்மியமாகவே ஆலந்தி யேந்துவராம்
நாட்டியம்மாடுவார் பாருங்கேடி
கண்டு பண்டாரத்தைக் கொண்டாடி
கய்ப்பதங்கள் யேந்துவராம்

தெண்டல் செய்து பூசை செய்திடுவராம்
தொழு கும்மியடித்திடுவராம்
பூசை பெரிய பண்டாரம்ங் கொள்ள
போறப் படைகழும் பூசை கொள்ள
ஆசையுடனே திருமாலைத் தொளவே

அய்யரும் பல்லாக் கேறினராம்
பல்லாக்கில் பண்டார சுவாமி யாறிவரவே
பச்சமாலும் பிராந் தேறி வரவே
வல்ல சிவகாமி பாற்பதித் தாயாரும்
வாய்த்த பொன்னும்ந் தேரிலே யேறிவரவே

நந்தி சூரன் சலுகைக் காறன்
நாராயணப் பெருமாழுடனே
வந்தாரே பெரிய சுவாமியை சேவித்து
வக்கரையில் தீற்த்தங்களாட வென்று
வக்கரையில்ப் படைதான் வரவே

வாய்த்த மாமுனியு வரவே

1075. பரிசை — இசைப்பாட்டு
1077. நம்மியமாக — இகைவாச
1081. தெண்டல் — பணிவிடைகள்
1087 ஏறி> யாறி (பே.வ.மா)
1088. பருந்து> பிராந்து (பே.வ.மா)

வைய் கொண்டொம் மாமுனியு வரவே
தற்க்க மில்லாமல்ப் பெரிய பண்டாரமும்
தண்டிகை மீதிலே வாறாரேடி
வந்து தலங்கழும்ந் தானே பாற்த்து

வக்கரை தீற்த்தங்கள் தானாடி
சிந்தை மசிள்ந்து பெரிய பண்டாரமும்
தெய்வப் படைகழுஞ்சூள்ந்து வரவே,
அரி ஓம் நன்றாக குருவே துணை
சிதம்பர யீசுவரனது துணை
சரசுபதி முன்னிக்க சிவ
ஸ்ரீராம செயம்
வேலுண்டும் வினையில்லை சிவ ஓம் நம அய்யா சுவாமி துணை.

1097. வைகுண்டம்> வைய் கொண்டொம் (பே.வ.மா)
1099. தண்டிகை — பல்லக்கு

திரு(ப்)புகள்

1. முத்தைத் திரு பத்தித் திரு நகை
யத்திக்கிற சத்திச் சரவணே
முத்துக்கொரு வித்தைக் குருபரனென வோது
முற்கட் பரமற்குச் சுருயிற
முற்பட்டது கற்பித்தருள் பொருள்
முப்பத்து முவர்கற்த்தமர் மடி பேண
பத்துத் தலே தத்தக் கணே தொடுமோ
யற்றக் கிரி மற்றப் பொருதொரு
பட்டப் பகல் வட்டத் திரியிலி(ர)வாக
பத்தர்க் கிரதத்தத் தடவிய
பச்சைப் புயன் மெற்ச் சத்தருள் பொருள்
பட்சத்தோடு ரட்சித் தருளுவதொரு நாளே
தித்தித் திசை யொத்த பரிபுரம்
நிருத்த பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்க நடிக்கக் கழுகொடு கழுகாட
திக்கு வரி வட்டப் பயிரவி
தொக்குத் தொகு தொக்குத் தொகு தொகு
சித்திரை பவுரிக்குத் திறிகிட தோந்தமென வோது
கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக் குக் குகு குகு குக் குகுக் குகு குகு குகு
குத்திப்புதை புக்குப் பிடியெனு முதுகூகை
தோற்றத் தெள நட்புத் தவுணரை
வெட்டிப் பொலியிட்டுக் குலே கிரித்துப்
படையொத்துப் பொர வல்ல பெருமாளே

நூல் முடிந்த பின்னர் திருப்புகழ் என்னும் தலேப்பின் கீழ்ச்சில பாடல்கள் இவ்வேட்டுச் சுவடியில் உள்ளன. இப்பாடல் திருப்புகழ்க் கழகப் பதிப்பில் 6வது பாடலாக, பல்வேறு பாட வேறுபாடுகளுடன் உள்ளது. பாடவேறுபாடு ஒப்பு நோக்கிக் காண்க.

2. முப்பளம் மொடு பொரியப்ப மொடவல் பல
முக்கியெ கரி முன்னடியேனே
முத்தியில்லடியவர் புத்தியில்லுறைபவர்
முக்கண்ணன் வி......................
மறைப் பொருள் திரிள் புயன்
மற்றமும் மதியமும் வயித்திடும் மாமகன் மதைவானே
மத்தளி வயிறனே உத்தமி புதல்வனே
மட்டுறை மலர் .... பணிவோனே

முற்ப்படு கிரி தனில் முத்தமிள்ளாட விணை
முப்பட வெளுதியெ முதல்வாய் நீ
முப்பு(ர)ம் மெரி செய்தவச் சிவன்னரைதர்
மு .... பொடி செய்த வதி தீரா
அச்சரவணையது சுப்பிற மணியனே
அற்றிய துயிலதனை அரிதாகியேக்
குறை மகளுடன் நச்சத்திர முருகன்
யெக்கணம் .... மது பெருமாளே ..

இப்பாடல் திருப்புகழ்க் கழகப் பதிப்பில் விநயகர் வணக்கத்துள் முதற் பாடலாக பல்வேறு பாடவேறுபாடு களுடன் உள்ளது. பாட வேறுபாடு ஒப்பு நோக்கிக் காண்க.

3, திருடிகளு முலாவும் மிருபுய முரர்ரி
திருக் கண்ணும்ப் பெருமாளே
செகதலமும் மானும் மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமரப் பெருமாளே
மருவும் மடமாதரும் மகிளெ விளையாடும்
மரதக மேயுரப் பெருமாளே
யிருவினை யில்லாத கருவினை யெடாதே
யிமையவர் குலைசப் பெருமாளே
யிலகு சிலவேடர் கொட்டியே நெதிபர்ரர்
யிருதனை விஞேதப் பெருமாளே
யிருவினை யில்லாத கருவினை விடாதே
யமர் குருஞதப் பெருமாளே

இப்பாடல் திருப்புகழ்க் கழகப் பதிப்பில் காணப் பெறவில்லை.

4. மருக் குலாவியெ மலரணை கொத்தியத
வளைத்த தாய் தம்மர் வசைதனை நெகுலாதே
யருகுலாவியெ மொளிதனை அயர் ராதே
கடம்ப மரனில்ங்.........யினிவர விடை வேணும்
தருக் குலாவிய கொடியிடை மணவாளா
சமற்த்தனே மணி மரதக வடிவேலா
திருக் குலாவடி நிளர்த...... யிறையோனை
திருக் கயில் வேல் வடிவளகியெ பெருமாளே

இப்பாடல் திருப்புகழ்க் கழகப பதிப்பில் 805 வது பாடலாக பல்வேறு பாட வேறுபாடுகளுடன் உள்ளது. பாட வேறுபாடு ஒப்பு நோக்கிக் காண்க.

5. யிருந்த வீடும் கொஞ்சிஏய சிறுவனும் மிறுகேளும்
யிசந்த ஊர்கும் பெண்டி......யிளமையும் வளமோது
விந்த நாடும் குற்றமும் நிலையென்ற மகிளாதே
விளங்கு றீபங் கொண்டனை வெளிபட அருள்வாய்
குந்திலேனும் கொண்ட ... மருகர் முருகோனே
குரங்குலாவும் குன்றுறை குறமகள் மணவாளா
தெரிந்த வேதம் செந்தமிள் தெரிதரு புலவோர்ரே
சிவந்த காலும்ந் தண்டை......அளகிய பெருமாளே

இப்பாடல் திருப்புகழ்க் கழகப் பதிப்பில் 1047 வது பாடலாக பல்வேறு பாட வேறுபாடுகளுடன் உள்ளது. பாட வேறுபாடு ஒப்பு நோக்கிக் காண்க.

6. கருப்பந்தம் மகிர்ப் பந்தம்
கரை பங்கொண்டுருக்கும் பெண்
கனப்புண்டு சலிப்புண் டுந்த் துயர்காரர்
கடுகு குண்டு..... பிணிப்புண்டும்
களிப்புஉண்டும் நகைப்புண்டுந்த்
துரப்புண்டும்ந் தடுமாறி
செரித் தண்டம்ந்த் திரித்தண்டம்
புனத்தந் தண்டம்
தினத் தோற்ற றுற்றம்
தகைங் கொஞ்சும் கொடுமாய்
தியக்கங் கண்டுயங் கொண்டன்
சிறப்பங்கின் பிறப்பங்கின்
சினத்துன்ட பததிந்தம்...........

இப்பாடல் திருப்புகழ்க் கழகப்பதிப்பில் 42-வது பாடலாக பல்வேறு பாட வேறுபாடுகளுடன் உள்ளது. பாட வேறுபாடு ஒப்பு நோக்கிக் காண்க.

இறுதி ஓலை.

. . . . பிதாற்த்த வறிய ஞனெமெதாக
. . . . லவாயனே மலை வளியாக
. . . . த கோவிந்தம் சத கோவிந்தம்
யிஞ்சாதும் நாற்பதிலும் உகந்த யிருகண் விளி போமே
கண்ணுனெ அன்ம்பதிலே கடிதாக உடகளும் தோல்
[சுருங்கும்
எண்ணுறு அறுபதிலே உடல் ஏங்கி யிளைத்து தடுமாறும்
திண்ணமுடன் ஞ(ா)னம் திடனுக எளுவதிலே போமே
வன்ன செவிகள் ரெண்டும் வன்ங்காரும் என்பதில்த்
[தானடைக்கும்

அடைக்குமே யிந்தி . . . .
நடை தவறிடும்ந் தே . . . .
நடைக்குள் ஒ . . . .
மிகு சனங்களை வி . . . .
நடைகள் தவறி . . . டு . . . .
முன்னுட்டில் வயசி . . . .

இறுதி ஓலை மிகச் சிதைந்துள்ளது. கிடைக்கின்ற செய்திகள் உடற் கூற்றுத் தன்மையை விளக்குவனவாயுள்ளன.

பிழையும் திருத்தமும் நூலுள்

வரி	பிழை	திருத்தம்
76.	தெய்வரெல்லாம்	தெய்வாரெல்லோரும்
103.	காட்டுவராம்	காட்டுவாராம்
104.	பெருக்குவாராம்	பெருக்குவராம்
115.	தனித்து	தணித்து
122.	உயர்ந்த	உயந்த
139.	செம்பு	செம்புரு
202.	கொழுந்து	கொளுந்து
222.	கஞ்சரக்	கஞ்சாக்
257.	பிரந்தாரம்	பிறந்தாராம்
261.	தானிய(ல)ங்க	தாணி(ல)ங்க
265.	மாலேகாளம்	மாலேகளாம்
268.	பிறந்தாரன்றே	பிறந்தாரன்றே
273.	போடல	போலே
283.	மெங்க்கிமே	மெய்க்குமே
286.	சகலதுந்தாள்	சகலதுந்தான்
304.	ஆரபாரததோடே	ஆரபாரத்தோடே
338.	ரோகனியாம்	ரோகணியாம்
342.	முனிக்க	முன்னிக்க
366.	பண்மரம	பண்மரம்
369.	விளேயாடு(ம்)	விளேயாடு[ம்]
404.	பண்டார	பண்டாரம்
406.	தாஞேனே	தாஞனே
434.	சுந்தி	சுத்தி
439.	கரததில்	கரத்தில்
452.	அன்பந்தோ	அன்பத்தோ
484.	மலேயிருக்கும்	மலேயிலிருக்கும்
526.	தேபளி	தோளி
544.	தீற்தங்களாடி	தீற்த்தங்களாடித்
582.	வனத்யையும்	வனத்தையும்
611.	உடைத்(ை)த	உடைத்[ை]த
650.	யி(ா)ங்கே	யி[ா]ங்கே
651,	யி(ை)ட	யி[ை]ட
751.	முப்பரத்தையுங்	முப்பரத்தயுங்
819.	நரிவஞக்	நரியைக்
834.	முர்த்தியானவர்	மூற்த்தியானவர்
858.	சாத்திரமும்ஞ்	சாத்திரமுஞ்
876.	மாலேயான்	மாலேயன்
877.	வஞ்சனே	வஞ்சினே
880.	பெருமாளும்	பெருமாழுந்
883.	வின்னுங்	விண்ணுங்

912.	புய்லை	புல்லை
925.	காஞ்சரங்	காஞ்சுரங்
925.	யவினைய்தி(ன்)	யவினைத்தி(ன்)
925.	றவன்ந்தானே	றவன்ந்தானே
927.	அண்டண்ட	அண்டரண்ட
939.	சடைக்குள்ளிருந்து	சடைக்குளிருந்து
967.	மகிள்ந்திட	மகிள்ந்த
985.	கோட்டை	கோட்டையிட
1000.	வாடிகாளம்	வாடிகளாம்
1003.	கய்யாரப	கய்யாரப்
1067.	திருமலை	திருமாலை
1102.	மசிள்ந்து	மகிள்ந்து

அடிக் குறிப்புள்

வரி	பிழை	திருத்தம்
21.	வள்ளிய>	வள்ளியை>
31,	வாளுசின்ற	வாளுகின்ற
261.	வுக>	சை>
287.	தழல்> தணல்(பே.வ.மா)	தழல்> தணல் (பே.வ.மா)—தீக்கட் [டிகள்
304.	ஆரவாரம்	ஆரவாரப்>
314.	—அடைய	—அசைய
319.	என்னும்	என்றும்
322.	முள்ளடியில்	முன்னடியில்
326.	இனை	இன
338.	> திறியோதசி	> திறியேதசி
346.	ஆனைமுகப்பிள்ளை—	ஆனைமுகப்பிள்ளை— கணபதி
	> காற்ப்பமாக	> காற்ப்பாமாக
373.	பட்டக்குறத்தி	பச்சக்குறத்தி
400.	அழைத்து	அழைத்து>
418.	என்ற	என்று
856.	வல்லர்	வல்லர்—
906.	தாணி—	தாரணி—
918.	வாங்கு>	வாங்கு—
938.	தேரல் களத்தாத	தோல் கழற்றுத

ARCHIVES LIBRARY
No. 107533

4A
5-77